கொத்தனூர்க் காணியாளர் குழாயர்குல வரலாறு



T12170
R003K03
T. 12170

செ. இராசு

கொத்தனூர்க் காணியாளர்
குழாயர்குல வரலாறு

ஆசிரியர்

புலவர் செ. இராசு, பிஎச்.டி.,

தலைவர், கல்வெட்டியல்துறை,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு

திருப்பணிக் குழுவினர்

அருள்மிகு ஸ்ரீ கொத்தனூர் அம்மன் திருக்கோயில்

வெளவால் கொத்தனூர் — 638 703

ஊதியூர் (வழி), ஈரோடு மாவட்டம்.

வெளியீடு: 31.1.1998; குடமுழுக்குப் பெருவிழா

ஆசிரியர்: புலவர் செ. இராசு

நூல் கிடைக்கும் இடம்:

திருப்பணிக் குழுவினர்
அருள்மிகு ஸ்ரீ கொத்தனூர் அம்மன் திருக்கோயில்
வெளவால் கொத்தனூர், ஈரோடு மாவட்டம்.

ஆனந்தா வி. பழனிசாமி, செயலாளர்,
அருள்மிகு ஸ்ரீ கொத்தனூர் அம்மன்
ஆலயத் திருப்பணிக் குழு,
73, தளவாய்ப்பட்டிணம் ரோடு,
தாராபுரம் — 638 656.
(போன்: 20423, 20582, 20763)

விலை: ரூபாய் 30—00

அச்சிட்டோர்: அலமு அச்சகம், 5, அய்யா தெரு,
இராயப்பேட்டை, சென்னை —14

தவத்திரு தக்ஷிணாமூர்த்தி ஜடாதர பரமேஸ்வர
பண்டித குருஸ்வாமிகள்
திருக்கொற்றைத் திருவூர் மடம்,
இலக்கமனாயக்கன்பட்டி.

ஆசியுரை

உ
சிவகுகமயம்

குருபிரம்மா குருவிஷ்ணு குருதேவோ
மகேஸ்வர
குருசாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை
ஸ்ரீகுருவேநமஹ:

அங்கணன் கயிலை காக்கும்
அகம்படித் தொழின்மை பூண்டு
நம்குரு மரபுக் கெல்லாம்
முதற்குரு நாத னாகி
பங்கயத் துவழும் நாறும்
வேத்திரப் படைபொ ருத்த
செங்கயம் பெருமான் நந்தி
சீரடி சென்னி சேர்ப்பாம்!

என்ற வாக்கிற்கிணங்க தென்னாடுடைய சிவனே போற்றி என்னாட்டவர்க்குகம் இறைவா போற்றி

என்கின்ற வகையிலே நமது பாரதப் பெருந்திருநாட்டின் இளங்கதிரவனாக விளங்கி தமிழைத் தெய்வமாகக் கொண்டு வாழ்ந்து வருவது நமது தென்தமிழ் நாடு. அதன் ஒருபகுதி கொங்குச் சைவ வேளாளர் சமூகத்தைச் சார்ந்தது கொங்கு இருபத்துநான்கு நாடு. அவர்கள் பல்வகை விருதுகளையும் பட்டங்களையும் பெற்று, சைவ சமயமும், திருக்கோவில் வழிபாடும் சிறந்து விளங்க தென்கரைநாட்டுக் காணியாளக் கவுண்டர்கள் சமூகத்தார்கள் நான்கு குரு மடங்களை அமைத்தார்கள். அதில் வெளவால் கொத்தனூரைத் தலைமையிடமாகக் கொண்டு குழாயகுல கோத்திரத்தார் தாங்கள் வழிபடவும் உபதேசம் பெற்றுக் கொள்ளவும் விஸ்வநாதர் விசாலாட்சி பெருமாள் முருகன் கன்னிமார் கருப்பராய சுவாமி கொத்தனூரம்மன் குருமடம் ஆகியவற்றை நிறுவி வழிபட்டு வந்தார்கள். காலமாற்றத்தால் திருக்கோவில்கள் பழுதுற்றதன் காரணமாக உயர்திரு ஆர். பாலாமணிக்கவுண்டர், ஆனந்தா வி. பழனிசாமிக்கவுண்டர் மற்றும் என். இராமசாமிக் கவுண்டர் ஆகியோரது விடாமுயற்சியாலும் பல ஊர்களிலும் பரவிக் கிடக்கும் நமது குழாய குல கோத்திரத்தாரர்களையும் ஒன்றுசேர்த்து முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்கின்ற வகையில் புதிதாக கோவில்களை அமைத்து நிகழும் மங்களகரமான ஈஸ்வர வருடம் தைமாதம் 19 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மங்கல நல்வேளையில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுகின்ற புனிதநாளில் நமது திருக்கொற்றைத் திருவூர் மடத்தின் இரண்டாவது காணியாளர்களாக விளங்கும் குழாய குல

கோத்திரத்தாரும், மற்றும் வழிபடும் அனைத்துப் பெருமக்களும் கொத்தனூர் அம்மன் திருவருளால் கலையாத கல்வி குறையாத வயது கவடு வாராத நட்பு கன்றாத வளமை குன்றாத இளமை கழுபிணியிலாத உடல் சலியாத மனம் அன்பு அகலாத மனைவி தவறாத சந்தானம் தாளாத கீர்த்தி மாறாத வார்த்தை தடைகள் வாராத கொடை தொலையாத நிதி கோணாத கோல் ஒரு துன்பமில்லா வாழ்வும் கிடைத்திட எமது பூஜாமூர்த்தியாம் அருள்மிகு பிரகன்னாயகி உடனமர் அப்பரமேஸ்வரசுவாமி, உத்தண்ட வேலாயுத சுவாமி ஆகிய தெய்வங்களைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

ஸ்ரீலஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஜடாதர பரமேஸ்வர
பண்டித குருஸ்வாமிகள்
திருக்கொற்றைத் திருவூர் மடம்,
இலக்கமனாயக்கன்பட்டி.

கயிலை மாமுனிவர்
தவத்திரு சாந்தலிங்க
இராமசாமி அடிகளார்
பேரூராதீனம், பேரூர்.



கொத்தனூர் அம்மன் வாழ்த்துப்பா

1. கொங்குவே ளாளர் பண்பார்
குலம்பல கொண்டு வாழ்வார்
மங்குதல் இன்றி வேளாண்
தொழில்செய்து மற்ற வர்க்கு
பொங்குநல் வளஞ்சேர் நட்பால்
புகழ்பெறும் குழாயர் கூட்டம்
தங்குல தெய்வம் கொத்த
னூரம்மை தாள்கள் போற்றி!

2. பண்புசேர் கொங்கு நாட்டின்
பழம்பெரும் குடிகளாக
மண்புகழ் குழாயர் கூட்டம்
வழிபடும் கொத்த னூரில்
விண்புகழ் அம்மை கோயில்
விதிமுறை அமைத்து நாளும்
தண்ணிய வழிபா டாற்றித்
தழைத்துநீ டூழி வாழி!

அன்புடன்
சாந்தலிங்க இராமசாமி அடிகள்

எஸ்.கே. குமாரரத்தின வேணாடுடையார்
பட்டக்காரர்
சங்கரண்டாம்பாளையம்

வாழ்த்துரை

கொங்கு நாட்டில் மிகப் பழமை வாய்ந்ததும் பெருமையுடையதும் ஆன தென்கரை நாட்டில் வெளவால் கொத்தனூரில் எழுந்தருளியிருக்கும் ஆதிபராசக்தி கொத்தனூர் ஸ்ரீ கரியகாளி அம்மன் ஸ்ரீ கன்னிமார் சுவாமிகள் மற்றும் பரிவார மூர்த்திகளின் திருக்குடமுழுக்கு என்னும் மகாகும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற மனமார வாழ்த்துகிறோம். குழாய குலத்தாரின் அரிய முயற்சியின் பேரில் அருள்தரும் அன்னையின் கோயில்கள் திருப்பணி தொடங்கி ஐந்து ஆண்டுகள் முடிந்து மங்களகரமான ஈஸ்வர வருடம் தை மாதம் 19ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (1.2.1998) மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

மேற்படி திருப்பணியில் குழாய குலத்தைச் சார்ந்த தாராபுரம் ஆர். பாலாமணியும், ஆனந்தா வி. பழனிசாமியும், என். இராமசாமியும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி நிறைவு செய்துள்ளனர். பல

நூற்றாண்டுக் காலம் வழிபாடின்றி இருந்த குழாய குலத்தாரின் முதல் காணியான வெளவால் கொத்தனூர் அருள்தரும் ஸ்ரீ கரிய காளியம்மன், ஸ்ரீகன்னிமார் சுவாமிகள் மற்றும் பரிவார மூர்த்திகளின் திருப்பணி குழாய குலத்தாருக்கு மறுவாழ்வு பெற்றது போலாகும்.

தென்கரை நாட்டின் கொற்றையம்பதியில் மேற்படி குழாய குலத்தாருக்கு முதன்மை இருப்பது வரலாறு. வெளவால் கொத்தனூர் குழாய குலத்தாருக்கு முதன்மைக் காணியாக இருப்பதாலும், குடமுழுக்குப் பெருவிழாச் செய்வதாலும் மேற்படி குலத்தார்கள் எல்லா வளங்களும் நலங்களும் பெற்று நீண்ட பெருவாழ்வு வாழ என் உளங்கனிந்த வாழ்த்தும் நல்லாசியும்.

அன்புடன்,

எஸ்.கே. குமாரரத்தின வேணாடுடையார்



அருள்மிகு ஸ்ரீ கொத்தனூர் அம்மன்

திருப்பணிக் குழுவினர்

திரு. ச. குமரவேல் கவுண்டர்
பெருந்தலைவர்

திரு. ஆர். பாலாமணி
தலைவர்



திரு. ஆனந்தா, வி பழனிசாமி
செயலாளர்

திரு. என். இராமசாமி
பொருளாளர்

அன்னையின் அருட்பணியில் நாங்கள்.....

"காவல் குழாயன் காணியெனப் பேர்பெற்ற
வெளவால் கொத்தனூர் வாழும்
அம்மன்—தாள்பணிந்து

பாவலர் போற்றும் தேன்கரை நாடு!
கோவேளிர் கொத்தனூர்
குழையனுக்கென்றே பாடு!"

—குழாயர்குலக் காணிப் பாடல்

ஆன்மீகப் பெரியோர்களே! குழாயகுலத் தோன்றல்களே!! வணக்கம். ஈரோடு மாவட்டம் காங்கயம் வட்டம் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பொன்னூதிமலை (ஊதியூர்) அருகில் உள்ள வெளவால் கொத்தனூர் புகழ்பெற்ற கொங்கு நாட்டின் சிறப்புக்கள் பல பெற்ற ஊராகும்.

சேர சோழ பாண்டியர்கள் காலத்தில் கட்டப்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்கள் நிறைந்த ஊர்தான் கொத்தனூர். கொங்கு குழாயகுல மன்னர்களது காணியாக இருந்து காலச்சூழ்நிலையில் சிதிலமடைந்து ஆலயங்கள் முழுவதும் பழுதடைந்து பல நூறாண்டுக்காலம் வழிபாடின்றி வனங்களாக மாறிவிட்ட சூழ்நிலையில் பிரிந்து சென்ற குலமக்களையெல்லாம் ஒன்றுசேர்த்து தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பரவி இருக்கும் சுமார் 1500 குடும்பங்களுக்கெல்லாம் தகவல் அனுப்பி அன்னை ஆதிபராசக்தி அருள்மிகு ஸ்ரீகொத்தனூர் அம்மன் ஆலயம் அமைக்க ஏற்பாடு செய்தோம்.

குலப்பெரியோர்களது ஆணைப்படி திருப்பணிக் கமிட்டிகள் அமைத்து அருள்மிகு அன்னையின் தாள்பணிந்து நாங்கள் ஆன்மீகப் பயணம் தொடங்கி இன்றைக்குச் சரியாக ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டது. 1993ஆம் ஆண்டின் தொடக்கத்தில்

ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் ஆரம்பத்தில் மெதுவாகத் தொடங்கி 1994 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24ஆம் நாள் (தை மாதம் 11 ஆம் தேதி) திங்கள் அதிகாலை 4.30 மணிக்கு அன்னையின் ஆலயத்திற்குப் பாலாலயம் செய்விக்கப்பட்டது.

ஆரம்பத்தில் திருப்பணி மெதுவாகத் தொடங் கினாலும் அன்னையின் அருளும் ஆன்றோர்கள், குலப்பெரியோர்களது ஆசியும் சேர்ந்து திருப்பணி வேலைகள் திறம்பட நடந்து வந்தது.

திருப்பணிக் கமிட்டியின் பெருந்தலைவராக உள்ள பெரியவர் ஐயா மேல்கரைப்பட்டி ச. குமரவேல் கவுண்டர் அவர்கள் அன்னை எங்களுக்குக் கொடுத்த வரப்பிரசாதம். பல ஆலயங்களை அவர்கள் தனது தலைமையில் நிறுவியிருக்கின்றார்கள். நல்ல மன ஆன்மீகப்பக்குவமும் வயதும் பக்தித்தோற்றமும் கொண்டவர்கள்.

அதேமாதிரி திருப்பணிக் கமிட்டியின் தலைவராக வாய்த்தவர் தாராபுரம் ஆர். பாலமணி அவர்கள். குழாய குலத்தார்களுக்கு நன்கு அறிமுகமானவர். நல்ல ஈகைமனம் கொண்டவர். அன்னையின் பணியே தன்பணி என்று அல்லும்பகலும் உழைத்து ஆலயம் அமைக்க அனைத்து வகையிலும் ஏற்பாடு செய்ததுடன் தானும் இலட்சக்கணக்கில் பொருள் உதவியும் செய்து ஆலயத்தை அமைக்க உதவியிருக்கிறார்கள். அனைவரையும் தனது அன்பால் அரவணைத்துச் செல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள். அவரது பங்கு இந்தத் திருப்பணியின் முழுமைக்கும் பெரிதும் உதவியாய் இருந்துள்ளது என்பது குலமக்கள்

அனைவருக்கும் தெரிந்து இருக்கும். அன்னையின் ஆலயப் பாலாலயத்தின் போது பழுதடைந்த ஆலயத்தைப் புதுப்பிக்கக் குலத்தைச் சார்ந்த யாரேனும் 3 நாட்களுக்கு ஆகாரம் இன்றி ஒருசந்தி என்ற பட்டினி இருக்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படை எழவே தலைவர் ஆர். பாலாமணி அவர்கள் 15 நாட்கள் அன்ன ஆகாரம் இன்றிப் பட்டினி இருந்தார்கள் என்றால் அவர்கள் அன்னையின்பால் வைத்துள்ள அளவில்லாப் பற்றை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

மேலும் இனிவரும் காலங்களிலும் அவர்களே அன்னையின் ஆலயத்தில் அறங்காவலர் குழுவின் தலைவராகவும் இருந்து இந்த ஆலயத்தையும் குலமக்களையும் வழிநடத்திச் செல்ல எல்லாம் வல்ல அன்னையின் அருளை வேண்டுவோம்.

திருப்பணிக் கமிட்டியின் செயலாளராக இருந்து ஆரம்பம் முதல் இன்றுவரை அன்னையின் ஆலயத் திருப்பணியில் ஈடுபடுத்திக் கொண்ட நானும் (ஆனந்தா வி. பழனிசாமி) பல சூழ்நிலையில் அன்னையின் அற்புதங்களை அனுபவித்து இருக்கிறேன். ஆரம்பத்தில் குலமக்களை ஒன்று சேர்க்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டு எங்களது குழுவுடன் சென்று எல்லா இடங்களிலும் மக்களைச் சந்தித்து ஆலயத்தைப் புதுப்பிக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினோம். கடலில் தத்தளிக்கும் மக்கள் கரைசேர ஒரு பற்றுதல் கிடைத்தது போல் குலமக்களும் எங்களது அணுகுமுறையை வரவேற்று எங்களுக்கு நல்ல ஊக்கம் கொடுத்தனர். அவர்களது ஊக்கம், ஆவல்

ஆகியவைதான் அவர்கள் இட்ட பணிதான் செயலாளராகிய நானும் எங்களது குழுவும் திருப்பணிக் கமிட்டியென ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆரம்பத்திலிருந்து கமிட்டிகள் போட்டு திருப்பணியைத் தொடங்கினோம்.

அன்னையின் அருளும் குலமக்களது ஆவலும் சேர்ந்து கிட்டத்தட்ட ஐந்தாண்டு காலத் திருப்பணி முழுமை அடைந்து கும்பாபிஷேகம் 1998 பிப்ரவரி 1 ஆம் தேதி சிறப்புற நடைபெற உள்ளதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பல நூற்றாண்டு காலம் வழிபாடு இன்றி இருந்த ஆலயத்தில் அன்னையின் அருட்சக்தி குன்றிவிட்டது. அதுமாதிரி குலத்தைச் சார்ந்த மக்களிடமும் செழிப்பின்றி பல குடும்பங்கள் சீரழிவுடன் நடந்து கொண்டு இருந்தது.

நாங்கள் திருப்பணி தொடங்க முயற்சிக்கும்போது அன்பர் ஒருவர் மூலம் அன்னையின் அருள்வாக்குக் கிடைத்தது. நமது தென்கரை நாட்டு எல்லை நமது குல வரலாற்றில் இடம்பெற்று இருக்கின்ற நாடுகாண்மேடு (தற்போது கம்புளியம்பட்டி அருகில் உள்ள வெங்கமேடு) என்ற இடத்தில்தான் நான் இருக்கிறேன். அங்குவந்து பூசித்து என்னை அழைத்து வாருங்கள் என்று கேட்டுக்கொண்டதன்பேரில் திருப்பணிக்கமிட்டியார் சார்பில் நாங்கள் மேற்படி நாடுகாண்மேடு எல்லையில் உள்ள மலைமேல் சென்று அங்குள்ள ஆலயத்தில் வழிபாடு பூசைகள் செய்து அன்னையை அழைத்து வந்துதான் திருப்பணி தொடங்கினோம்.

அதற்கு முன்பிருந்த பழுதடைந்த ஆலயமும், தற்போதைய புதுப்பித்த ஆலயமும் செழிப்பும் அன்னையின் அருளும் அன்பர்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். மேலும் அன்னையின் ஆலய வழிபாடும் அன்னையின் அருட் சக்தியும் தற்போது இருப்பதினால்தான் திருப்பணியும் குலமக்களது இல்லங்களும் தொழில்களும் சிறப்பாக நடந்து வருகிறது என்பது எங்களது அனுபவப்பூர்வமான கருத்தும் உண்மையும் ஆகும்.

ஆகவே இனிவரும் காலத்திலும் என் பணியும் தொடர்ந்து அன்னையின் ஆலயத்திற்கு என்னால் இயன்ற பணியைச் செவ்வனே செய்ய அன்னை ஆதிபராசக்தி அருள்மிகு கொத்தனூர் அம்மன் திருவருள் கிடைக்க அன்னையின் தாள்பணிந்து வேண்டுகிறேம்.

மேலும் திருப்பணிக்குப் பொருளாதாரம் முக்கியம். திருப்பணியின் பொருளாளராக உயர்திரு. என். இராமசாமி (சகுனிபாளையம்) அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். ஆரம்பம் முதல் இன்றுவரை தான் எடுத்துக்கொண்ட பணியைத் திறம்பட நடத்திக்காட்டி உள்ளார். அவ்வப்போது வசூலில் மந்தம் ஏற்பட்டாலும் திருப்பணியின் வேலைகளைத் துரிதப்படுத்தி வேகமாகச் செயல்படக் கூடியவர். ஆரம்பம் முதல் அன்னையின் பணியிலே தானும்-தனது தம்பி உயர்திரு.என். தங்கமுத்து அவர்களும் சேர்ந்து பங்கெடுத்துக் கொண்டு முழுமுயற்சியுடன் செயல்பட்டுக் கொண்டு உள்ளனர். திருப்பணி முழுமைபெறப் பொருளாளர் சகோதரர்கள் இருவரது

பங்கும் பெரிய வாய்ப்பாக இருந்து வருகின்றது. ஆரம்பத்தில் குலமக்களை அணுகத் தங்களது கார் மற்றும் வாகனங்களைக் கொண்டு எல்லா ஊர்களுக்கும் சென்றுவர உதவியதுதான் திருப்பணிக்கு மூலாதாரமாக அமைந்தது. அவர்களும் திருப்பணியில் அதிக அளவில் பொருளாதாரத்தைக் கொடுத்து இரவு பகலாகத் திருப்பணிகளைத் துரிதப்படுத்தி உள்ளார்கள்.

இனிவரும் காலங்களிலும் கோவில் நிர்வாகக் குழுவிலும் பொருளாளராகத் தொடர்ந்து இருந்து நடத்திச் செல்ல அன்னையின் அருள்பாலிக்க வேண்டுகிறோம்.

குழித்தலை வட்டாரம் கோவிலூரைக் காணியாகக் கொண்ட குழாயர் குலத்தைச் சார்ந்தவர்கள் காவிலுவர் ஆதிக்கம் புரிந்த தென்கரை நாட்டைப் படைகொண்டு தாக்கி வெளவால் கொத்தனூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். பிற்காலத்தில் பெரியகுலத் தலைவர் வேணாடர், தென்கரை நாட்டைக் கைப்பற்றிச் சங்கரண்டாம்பாளையம் கொற்றனூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். குழாய குலத்தார் சிலர் வெளியேறி வேறு சில இடங்களில் குடிபெயர்ந்துவிட்டனர். சிலர் அங்கேயே தங்கி வேணாடர் குலக் கோவில்களையே தெய்வமாக வழிபட்டுள்ளனர். ஆனால் சங்கரண்டாம்பாளையம் கொற்றனூரில் குழாய குலத்தார்களுக்கு முதன்மை இருப்பது பற்றி வரலாற்று ஆய்வு கூறுகிறது. வெளவால் கொத்தனூரில் தனியுரிமை இருப்பதும் கல்வெட்டு- பட்டயம் மூலம் அறிகிறோம்.

கோவை உயர்திரு. டி.எம். காளியப்பா, திருமதி. சக்திதேவி அவர்களது கொங்கு வேளாளர் வரலாறு நூல் நான்காம் பதிப்பில் மேற்கண்ட தகவல்கள் துல்லியமாக விளக்கியிருப்பது நமக்குப் பெரும் சான்றாக உள்ளது.

கல்வெட்டு ஆராய்ச்சியாளர் புலவர். செ. இராசு அவர்கள் கொடுக்கும் தகவல்களும் மற்ற கல்வெட்டு-பட்டயம்- வரலாறு செவிவழிச் செய்தி ஆகியவைகள் அனைத்தையும் கூர்ந்து நோக்கும்போது மேற்குப்பகுதியில் உள்ள வடுகபாளையம், மந்திரி பாளையம், குள்ளம்பாளையம், வாவிபாளையம், கழுவேரிபாளையம், முத்தூர்-கோட்டப்பாளையம், எலவந்தி, கரசமடை, பொங்கலூர் வட்டாரம் மற்றும் வடக்கே பூந்துறைநாட்டுக் குழாநல்லி ஆகிய ஊர்களிலும் நமது குழாய குலத்தார்கள் நிறைந்து உள்ளார்கள். இருந்தாலும் எல்லாக் குழாய குலத்தார்களுக்கும் பூர்வீகம் கோவிலூர்தான் என்றும் அங்கிருந்த பல காலச்சூழ்நிலைகளில் குடிபெயர்ந்து வந்து முதல் காணியாகத் தேன்கரை நாட்டில் கொத்தனூரில்தான் காணி அமைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. ஆகவே அருள்தரும் அன்னையின் ஆலயம் திருப்பணி முடிந்து குடமுழுக்கு விழா என்னும் மகாகும்பாபிஷேகத்திற்கு எல்லா வகையிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் திருப்பணிக் கமிட்டியின் சார்பாக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மேலும், ‘கொத்தனூர்க் காணியாளர் குழாயர் குல வரலாறு’ மலர் வெளியிட உதவிபுரிந்த கொங்குச்செல்வர், ஆராய்ச்சியாளர் புலவர்

செ. இராசு அவர்களுக்கும், மலர் வெளியீட்டுக் கமிட்டி உறுப்பினர் மந்திரிபாளையம் நா. அருணாசலம் அவர்களுக்கும் திருப்பணிக் கமிட்டியின் சார்பில் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆகவே, முதல்காணி கொத்தனூர்-குலதெய்வம் அருள்மிகு ஸ்ரீகொத்தனூர் அம்மன் மற்றும் பரிவார மூர்த்திகளைப் புணருத்தாரணம் செய்து திருக்குடமுழுக்கு என்னும் மகாகும்பாபிஷேகம் செய்து அன்னையின் அருட்பாக்கியத்திற்கு அனைத்துப் பகுதி குழாய குலத்தார்களும் ஆளாக வேண்டும் என்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஓம்சக்தி

என்றும் அன்னையின் அருட்பணியில்,
ஆனந்தா வி. பழனிசாமி
செயலாளர், திருப்பணிக்கமிட்டி
தாராபுரம்
ஈரோடு மாவட்டம்.

பொருளடக்கம்

1. வேளாளர் தோற்றமும் குடியேற்றமும் 1
2. கொங்குநாடும் தென்கரை நாடும் 8
3. ஆறும் மலையும் 20
4. கொற்றனூரும் கொத்தனூரும் 26
5. கொத்தனூரம்மன் என்ற கரியகாளியம்மன் 31
6. கொத்தனூர்க் கோயில்கள் 39
7. குழாயர்குலம் 44
8. வரலாற்று ஆவணங்களில் குழாயகுலம் 55
9. குழாயகுலத் தேவமன்றாடியார் 61
10. தீத்தாய் அம்மன் 65
11. குலகுருக்கள் 68
12. புகழ்பாடிய புலவர்கள் 75

வேளாளர் தோற்றமும் குடியேற்றமும்

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'
'மேழிச் செல்வம் கோழைபடாது'
'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'

என்றெல்லாம் புலவர் நாவால் போற்றியுரைக்கப்படும் இனம் வேளாளர் இனம். புகழ்மிக்க தொழில் உழவுத் தொழில். வான்புகழ் வள்ளுவன் வகுத்துரைத்த ஒரே தொழில் உழவுத்தொழில். உலகம் இயங்க, உலகினர் வாழ இன்றியமையாது வேண்டப்படும் தொழில் உழுவுத் தொழில் ஒன்றேயாகும். அதை வாழ்விலும் தாழ்விலும் விடாமல் செய்து உலகை உபசரிக்கும் சான்றோர் உழவர்கள்-வேளாளர்கள்.

புராணம்

சிறப்புமிக்க வேளாளர் புராணத்தை அழகிய கவிதை வடிவில் ஆக்கித் தந்தவர் வீராட்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர் அவர்கள். பெருங்காவியம் என்று போற்றப்படக்கூடியது. அந்நூலில் வேளாளர் தோற்றம் பற்றிப் புராண ஐதீகங்களுடன் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

வேளாளர் புராணத்தை அழகிய உரைநடை வடிவில் கோவை விளாங்குறிச்சி நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். இரண்டு நூல்களுமே அச்சிடப் பெற்றுள்ளன. அந்நூலில் வேளாளர் தோற்றம் கீழ்வருமாறு கூறப்படுகிறது.

கைலாசத்தில் சிவபெருமான் பார்வதி தேவியாருடன் வீற்றிருக்கும்போது நான்முகனாகிய பிரம்மா அங்கு வந்து சிவபெருமானால் உலகில் படைக்கப்பட்ட இயற்கை வசதிகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்று முறையிட்டார். சிவபெருமான் நான்முகனிடம் திருமாலைச் சென்று பார்க்குமாறு பணித்தார்.

திருமாலிடம் சென்று நான்முகன் மேற்கண்டவாறு முறையிடும்போது போதாயன முனிவர் அங்கு வந்தார். போதாயன முனிவரைத் திருமால் நான்முகனுக்கு அறிமுகம் செய்து வைத்து அவரையே வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

உழவு செய்யத் தெரியாமல் உணவைப் படைக்கத் தெரியாமல், உணவை உண்ணத் தெரியாமல் இருந்து இவ்வுலகுக்குக் கங்கைத் தாயின் அருகேயுள்ள திருவேணி சங்கமத்திலிருந்து மரபாளன் ஒருவனை உற்பத்தி செய்து அவனுக்குச் சகல வாழ்வியல் செய்திகளையும் கற்பிக்குமாறு போதாயனருக்குத் திருமால் ஆணையிட்டார்.

கங்கா தேவியின் சன்னிதானத்தில் வணங்கி மரபாளனைப் பெற்றுத் தன்னோடு இந்திரலோகத்திற்கு

அனுப்பவேண்டும் என்று போதாயன முனிவர் வேண்டினார்.

தான் பெற்ற மரபாளனை இரு கைகளாலும் பரிந்தெடுத்து உச்சிமோந்து ஆனந்த முத்தங்கள் தந்து 'பொன்னுலகு சென்று சிறப்பெல்லாம் பெற்றுப் போதாயனருடன் மண்ணுலகு செல்க மகனே' என்று தாய் கங்காதேவி அனுப்பி வைத்தாள்.

இந்திரன் எல்லா இன்பங்களையும் குறைவறப் பெற்றிடுக என மரபாளனை வாழ்த்தினான். இந்திரன் மரபாளனைச் சரியாசனத்தில் இருக்கச்செய்து 'பார் முழுதும் ஏர்முனையைத்தான் நம்பியுள்ளது. சீரைத் தேடின் ஏரைத் தேடு என்கிறார்கள். சகல பிணிகளிலும் தலைசிறந்த பசிப்பிணியைத் தீர்க்க உழவு வைத்தியத்தைத் தவிர வேறு உண்டோ? உழவுத்தொழில் இல்லாமல் உலகில் என்னதான் நடக்கும் இதற்கு இணையான தொழில் உலகில் ஏதுமில்லை, என்றான்.

இந்திரன், குபேரன் இவர்களின் பெண்மக்களை மணந்த மரபாளன் (வேளாளன்) பூமிக்கு வந்து பயிர்த்தொழில் செய்ய முற்பட்டான். கங்கையின் அருளால் தோன்றிய காரணத்தால் வேளாளர் கங்கா குலத்தினர், கங்கை மைந்தர் என்று அழைக்கப்பட்டனர்.

டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்கள் வேளாளர்கள் கங்கா குலத்தினர் என்று கூறப்படுவதை வைத்துக் கங்கைச் சமவெளியில் வேளாளர் தோன்றினர் என்பார்.

இலக்கியத்தில் கொங்குவேளாளர்

ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி என்பது ஒரு சிற்றிலக்கியம். சேரகுலச் சின்னத்தம்பி நாவலர் என்னும் புலவர் பாடியது. இதனைக் கருந்தும்பிப் புலவர்மகன் திருப்பூர். க. பழனிசாமிப் புலவர் பதிப்பித்துள்ளார். அந்நூலில் சோழன் மகள் சேரனை மணந்தவள் சீதனமாக வேளாளரை அனுப்புமாறு கேட்டதாகவும், சோழன் அவ் வேளாளர்களை நன்முறையில் நடத்த வாக்குறுதி அளித்தால் அனுப்புவதாகக் கூறச் சேரமானும் வாக்குறுதி கொடுத்து வேளாளர்களை அழைத்துவந்தது கூறப்படுகிறது. அப் பாடல் பகுதி,

'திக்கெலாம் மதிக்கும் சேரமான் பெருமாள்
குருத்தணி சோழன் குறைவிலா தீன்ற
உருத்திர மணியின் உடனக மகிழ்ந்து
மணம்புரிந் துலகில் வாழ்ந்திடும் நாளில்
குணமுடன் மகட்குக் குருத்தணி சோழன்
சீதன வரிசை சிலபொருள் உதவும்
போதினில் மகளும் பொருந்தியுள் மகிழ்ந்து
தந்தைதன் னுடனே சாற்றிய வசனம்
நந்தலில் லாத நாற்பத்தெண் ணாயிரம்
நற்குலத் தாரில் நாலிரு ஆயிரம்
நிற்கிரி கடனே நீடூழிக் காலம்
மதியுடன் எங்கள் மன்சபைச் சுமுகராய்
இதமுடன் இருக்க ஈகுவீர் என்னக்
கூறவும் மகிழ்ந்து குருத்தணி சோழன்
சேரமா னுடனே செப்புவர் சிறப்பாய்
மகளுரை தவறா வாய்மையால் யானும்

வகையுடன் வேளாண் மரபுளோர் அனுப்பில்
உங்களோ டொப்ப உயர்ச்சியாய்ப் பார்க்கில்
அங்குயான் அனுப்ப அகம்சம் மதிப்பேன்
என்றவர் சொல்லவே சேர மானும்
நன்றவர் நமது நாடதி பதியாய்
வரிசைமெய்ப் புகழுடன் வழங்குவேன் எனவும்
சரிசரி யெனவே தரணிபா லகரில்
கண்ணன் ஆனங்கூர்க் காணிமுத் தையனை
மன்னவர் சபையில் வரவழைத் தேதான்
எண்ணா யிரங்கோத் திரத்துளோர்க்கு அரசன்
நண்ணாகக் கொங்கு நாடதை விளக்கம்
செய்துதான் இருப்பீர் சென்மென அனுப்ப
உய்யவே சேரன் உலகுக்கு வந்தார்'

என்பதாகும்.

இங்கு மாதிரிக்கு ஒரு புராணமும் ஒரு இலக்கியமும் எடுத்துக்காட்டாகக்காட்டப்பெற்றுள்ளன. நமக்குக் கிடைக்கும் எல்லாப் பட்டயங்களும், கொங்கு இலக்கியங்களும் கொங்கு வேளாளரின் மேற்கண்ட குடியேற்றத்தை வற்புறுத்திக் கூறுகின்றன. மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் மூவேந்தர் இருக்கும்போது அவர்கள் ஆதரவு பெற்றுக் காவிரி, அமராவதி, நொய்யல், பவானி ஆற்றங்கரை வழியாகக் கொங்கு நாடெங்கணும் சென்று காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிக் கொங்கு நாட்டை வாழ்வும் வளமும் உடையதாகச் செய்து வேளாளர் கொங்கு வேளாளர் ஆயினர்.

விராடபுரத்தைத் (தற்காலத்திய தாராபுரம்) தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்துவந்த கொங்குச்சேர மன்னன் ஆட்டன் அத்தி என்பான் கரூர்க் குருத்தணி சோழன் மகளை மணந்துகொண்டான். அப்போது சோழமன்னன் தன் மகளுக்குச் சீதனமாகப் பொன், பொருள்களை அனுப்பிவைத்தான்.

அது சமயம் சோழன் தன் அரண்மனையில் இருந்த தன் மெய்க்காப்பாளர்களில் சிலரையும், தன் சபையிலிருந்து நம்பகமான சிலரையும் அனுப்பிவைத்தான். அப்போது கரூர் மாவட்டம் குழித்தலை வட்டம் கோவிலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்துவந்த குழையர்கள் (பிற்காலத்தில் குழாயர்கள்- காதில் குழை என்றும் குண்டலம் அணிந்தவர்கள்) என்ற குறுநில மன்னர்களையும் கொங்கு நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

ஆகவே அந்தக் காலகட்டத்தில்தான் குழாயகுலத்தார்கள் கொத்தனூரை (பிற்காலத்தில் வெள்வால் கொத்தனூர்) தேன்கரை நாட்டின் தலைமையிடமாகக்கொண்டு அருகில் உள்ள தென்னங்கரைப்பாளையம், இராக்கியாவலசு, பாறவலசு, முத்துப்புலவன் வலசு, புங்கந்துறை ஆகிய ஊர்களில் குடியமர்த்தப்பட்டனர்.

பிற்காலத்தில் பெரியகுலம் சார்ந்த சங்கரண்டாம் பாளையத்துப்பட்டக்காரர்கள் மூவேந்தரால் மும்முடிப் பட்டம் பெற்றுக் கொற்றனூரைத் தலைநகராகக் கொண்டு விளங்கினர். இருந்தாலும் தென்கரை

நாட்டில் உள்ள காவலன், குழாயன், பெரியகுலம், ஆந்தை, சேரன், செம்பூத்தன், செட்டியார் ஆகிய ஏழு குலத்தார்களுக்கும் மேற்படி சங்கரண்டாம் பாளையம் கொற்றனூர்ப் பெரிய நாச்சியம்மன் கோவிலில் எழு முதன்மை இருப்பதாக மேற்படி கோவிலில் உள்ள மகாமண்டப விதானச் சிற்பங்கள் சான்று பகர்கின்றன. கொற்றனூர் பற்றிய இரண்டு காணிப் பாடல்களிலும் மேற்கண்ட ஏழு முதன்மைக்கார்ரர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

கொங்குக் குழாயகுலம் உள்ளிட்ட மேற்கண்ட குலத்தார்கள் குடியேற்றம் கொங்குக் காணியான செப்பேடுபட்டயம் மூலம் உறுதிப்படுகிறது.

குடியேற்றத்தின் காலம்

கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறிய காலம் சங்க காலமாகும். முன்பெல்லாம் இக்காலம் சற்றுப் பிற்காலம் ஆக இருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால் ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டுக்கள், அறச்சலூர்க் கல்வெட்டு, கொடுமணல் அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் இவைகள்மூலம் வேளாளர் குடியேற்றக் காலம் சற்று முன்னுக்குப் போகிறது. மேற்கண்ட இடங்களில் ஆந்தை, அந்துவன், ஓதாளன், சாத்தந்தை, ஆதன், பண்ணன், மணியன், வண்ணக்கன் போன்ற கொங்கு வேளாளர் குலங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பழந்தமிழ் எழுத்துக்களைக் காணுகின்றோம். இவை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவையாகும்.

கொங்குநாடும் தென்கரைநாடும்

நம் செந்தமிழ் நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டை நாடு, கொங்கு நாடு என்ற இரண்டு தனிப்பிரிவு நாடுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது.

கொங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இதனைப் பழங்கால இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி மாவட்டங்களின் பகுதிகளும், திண்டுக்கல் மாவட்டம் பழனிப் பகுதியும், கரூர் மாவட்டக் கரூர், குளித்தலைப் பகுதிகளுமே கொங்கு நாடாகும்.

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று-
கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு'

என்பது ஒரு தனிப்பாடல். இதன்மூலம் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை என்பதும், தெற்கு எல்லை பழனிமலை என்பதும், மேற்கு எல்லை

வெள்ளியங்கிரிமலை என்பதும், கிழக்கு எல்லை குளித்தலை என்பதும் பெறப்படுகிறது. வடக்கு எல்லை தலைமலை என்றும், தெற்கு எல்லை வராககிரி (பன்றி மலை) என்றும், மேற்கு எல்லை வாளையாறு என்றும், கிழக்கு எல்லை கோட்டைக்கரை என்றும் சில ஆவணங்கள் கூறுகின்றன.

தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது. தண்டியலங்காரம் என்னும் தமிழ் அணியிலக்கண நூலின் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று 'வியன் தமிழ்நாடு ஐந்து' என்று கூறுகிறது.

'நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியான் அல்லன்-துறையின்
விலங்காமை நின்ற வியன்தமிழ்நாடு ஐந்தின்
குலங்காவல் கொண்டொழுகும் கோ'

என்பது அப் பாடலாகும்.

சைவ சமய நூல்களில் மிகவும் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமூலரின் திருமந்திரம் 'தமிழ் மண்டிலம் ஐந்து' என்று கூறுகிறது. எனவே கொங்குநாடு தனிப்பிரிவு என்பது உறுதிப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்குநாடு' தனி நாடாகக் குறிக்கப்பெறுகிறது.

'சேரநாடு என்னும் கேரளத்தில் வழங்கிவரும் பழக்க வழக்கங்களைக் கொங்கு நாட்டாரின் பழக்கவழக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால்,

எக்காலத்திலும் இவ்விரு நாடுகளும் ஒன்றாக இருந்திருக்க முடியாது என்று சொல்ல வேண்டும். கொங்குநாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்திருந்தால் சேரநாட்டு வழக்கம் கொஞ்சமேனும் கொங்கு நாட்டில் பரவியிருக்கும். இவையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் ஆதிகாலம் தொடங்கி இவ்விரு நாடுகளும் தனித்தனியாகவே இருந்திருக்க வேண்டும் என்றும், கொங்குநாடு ஒரு தனிநாடாகவே இயற்கையில் அமைந்து வந்ததென்றும் திண்ணமாகக் கூறலாம்' என்பது கோவை கிழாரின் கூற்றாகும்.

வராகமிகிரர் தன் நூலில் கொங்கு நாடு தனிநாடு என்று குறிக்கின்றார். அசோகன் கல்வெட்டிலும் தனி அரசராகக் குறிக்கப்பெறும் சதியபுத்திரர் கொங்கு நாட்டு மன்னன் அதியமானே என்பது ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

'ஸதியபுதோ அதியந் நெடுமாந்
அஞ்சி ஈத்த பாளி'

என்பது ஜம்பைக் கல்வெட்டாகும்.

'கொங்கு நாடு' என்னும் வரலாற்று நூலில் புலவர் அ.மு. குழந்தை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

'தொன்றுதொட்டே கொங்குநாடு சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு உட்படாத தனியாட்சி நாடாகவே இருந்துவந்தது. வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய வேளாண்குடிச் செல்வராகிய கொங்குநாட்டுத் தனி அரசர்கள் தமக்குள் பகையின்றி நாட்டை ஆண்டுவந்தனர். அவர்கள் முடியுடை மூவேந்தரிடத்தும் அன்பொடு நண்பும்

அமைவும் உடையவராக இருந்து வந்தனர். முடியுடை மூவேந்தர்க்கு மைத்துனரும் மாமனாருமாகிய அவர்கள் பின்னர் எவ்வாறு இருந்திருப்பர். கேரளோற்பத்தி, கேரள மான்மியம் போன்ற நூல்களும், திருவாங்கூர்ச் சரித்திர ஆசிரியர் சங்குண்ணி மேனன் அவர்களும், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் கொங்கு தனியாட்சி நாடு என்பதைத் தக்க எடுத்துக்காட்டுகள் காட்டி நிறுவியுள்ளனர்.'

தொல்பொருட் சிறப்புக் கல்வெட்டுப் பரப்பும் சிற்பச் செல்வமும், வரலாற்றுப் பெருமையும், வாழ்வியல் வளமும் வற்றாச் சீரும் உடையது நமது கொங்கு நாடு. 'கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்' என்பது பழமொழி. கொங்கு நாட்டார் தம் நாட்டு அளவைகளுக்குக் கூடக் 'கொங்கு' என்று பெயர் வைத்திருந்தனர். இன்றும் பல நிறுவனங்கள் 'கொங்கு' என்று பெயர் பெற்று விளங்குகிறது.

தென்கரைநாடு

கொங்கு 24 நாடுகளில் முதன்மையானதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான நாடு தென்கரைநாடு. தென்கரைநாட்டில்தான் கொங்கு நாட்டின் பன்னெடுங்காலம் தலைநகராகவிளங்கிய இராசராசபுரம் (தாராபுரம்) உள்ளது. அதற்குப் பழம் பெயர் கொங்கு, கொங்கு வஞ்சி, பராந்தகபுரம், இராசமகேந்திரபுரம், விராடபுரம் என்பனவாகும்.

கொங்கு 24 நாடுகளில் இரு நாடுகள் வடகரைநாடு, தென்கரைநாடு என்று பெயர் பெற்றுள்ளன. ஒருகாலத்தில் காஞ்சியாறு என்ற

நொய்யல் ஆற்றை மையமாக வைத்துக் கொங்குநாடு வடகரை, தென்கரை என்று பிரிக்கப்பட்டது. நாளடைவில் அப்பெயர் கொங்குநாட்டின் ஒரு உள்நாட்டைக் குறிக்கும் பெயராக அமைந்துவிட்டது.

கொங்கு நாட்டின் பழைய பூகோள வரலாற்றை எழுதிய கே.எஸ். வைத்தியநாதன் அவர்கள் அமராவதியாற்றின் துணை ஆறான வரட்டுக் கரைப்பள்ளம் அல்லது வரட்டாற்றின் தெற்கே அமைந்துள்ளதால் தென்கரை நாடு என்ற பெயர் அமைந்திருக்கலாம் என்று கூறுகிறார்.

தென் என்ற சொல்லுக்கு அழகு சிறப்பு என்றும் பொருள் உண்டு. தென்காஞ்சி, தென்கவசை போல தென்கரை என்று பெயர் வந்திருக்கலாம். தென்கரைக்கொடுவேலி, தென்கரைநியமம், தென்கரை வீரசோழ வளநாடு எனவும் சில பகுதிகட்குப் பெயர் வழங்குகின்றன. அஞ்சுகரை நாடு, எழுகரைநாடு, ஒன்பதுகரைநாடு எனவும் கொங்கு நாட்டின் சில நாடுகட்குப் பெயர் ஆகும்.

தென்கரைநாட்டு ஊர்கள்

கொற்றனூர் (கொத்தனூர்) மூலனூர், குறிச்சி (இலக்கும நாயக்கன்பட்டி), இளம்பிள்ளை (முளையாம்பூண்டி), வீராச்சிமங்கலம், தூரம்பாடி, எதிரனூர் (மாம்பாடி), பிரமியம், நீலம்பூர், ஊதியூர், கொழுமண்குழி, கிழான்குண்டல் என்பன தென்கரைநாட்டு ஊர்களாகும். இப்பன்னிரண்டு ஊர்களையும் தொகுத்து ஊர்த்தொகைப்பாடல் பின்வருமாறு குறிக்கிறது. தென்கரை நாடு என்ற

தொன்மையான நாட்டுப் பிரிவிற்கு ஆதாரமாக இன்றும் வெளவால் கொத்தனூருக்கு அருகில் தென்னங்கரைப் பாளையம் என்ற ஊர் ஒன்று உள்ளது.

கோதிலாக் கொற்றனூர் மூல னூரும்
குறிச்சியிளம் பிள்ளைவீ ராச்சி யோடு
ஏதிலா ரும்புகழும் தூரம் பாடி
எதிரனூர் பிரமியமும் நீலம் பூரும்
ஊதியூ ருடன்கொழுமண் குழிகி மானார்
உயர்குண்ட லுடன்பனி ரண்டூர் சேர்ந்து
நீதிசேர் தென்கரைநாடு ஆகும் என்றார்
நிறம்புகல்வி கற்றபெரும் புலவர் தாமே!

என்பது தென்கரைநாட்டுக் காணிப் பாடல்களில் காணும் பன்னிருகிராமப் பாடல். இவைகளைச் சற்று மாற்றி வேறு வகையாகவும் ஒரு பாடல் குறிக்கிறது.

கூடம் சூழ்கொற்றைப் பதியுடன் மூலனூர்
குறிச்சி யும்இளம் பிள்ளைப் பதியுடன்
ஆடல் சூழ்பொன் பரப்பியே மன்னுவீ
ராச்சி தூரை எதிரங் குறிச்சியும்
தேடு கின்ற பிரமியம் நீலம்பூர்
செம்பொன் ஊதிக் குகைமண் குழியுடன்
ஆடு கின்ற பரமன் பெரியம்மை
அருளூ தென்கரை நாடது வாழியே!

என்பது அப்பாடலாகும்.

இப்பாடலில் கொற்றனூர், மூலனூர், குறிச்சி, இளம்பிள்ளை, பொன்பரப்பி, வீராச்சிமங்கலம், தூரம்பாடி, எதிரனூர், பிரமியம், நீலம்பூர், ஊதியூர், குகைமண்குழி ஆகிய ஊர்கள் குறிக்கப்படுகின்றன.

எல்லை

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள வேணாடுடையார் வம்சாவளியில் தென்கரை நாட்டின் எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

'தென்ங்கரை நாடு யெல்லை தலையனாட்டுக்கு மேற்கு, நறயனூர் நாட்டுக்கு வடக்கு, புங்கலூற் நாட்டுக்கு கிழக்கு காங்கய நாட்டுக்கு தெற்கு இந்த நால் சதிறத்தில் கிளமேல் முக்காதம், தென்வடல் இறுகாதம் யிதுக்குள்ப்பட்ட கிராமம் 12' என்பது அதன் பகுதியாகும்.

பல பெயர்கள்

தென்கரை நாடு என்பதைத் தேன்கரை நாடு என்றும் படிக்கலாம். பிற்காலக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் தேன்கரை நாடு என்றே எழுதப்பட்டுள்ளது. சில ஆவணங்களில் தேங்கரசு நாடு, தேன்கரசு நாடு, தேன்கரைசு நாடு, தென்கரசை நாடு, தென்கரைசை நாடு எனவும் இந்நாடு குறிக்கப்பட்டுள்ளது.

க. பழனிச்சாமிப் புலவர் தென்னன்கரைநாடு என்று குறிக்கின்றார். தென்கரைநாடு என்பதையே திருந்திய வழக்கென்று கொள்ளலாம். மற்றவையெல்லாம் மக்கள் பேச்சுவழக்கில் மாறி வழங்கிவரும் மரூஉப் பெயர்களாகும். தேனை எப்படிப் பெயரிட்டழைத் தாலும் அதன் சுவை மாறுபடுவதில்லையல்லவா? அப்படியே தென்கரை நாட்டை எப்படியழைத்தாலும் அதன் பெருமை மாறுவதில்லை!

தென்கரை நாட்டின் பெருமை

தென்கரைநாடு இலக்கியச் சிறப்புடையது. பல்வேறு பெருமைகள் கொண்டது.

'பொன்கரை கொழித்திடும் பொருநைமாநதி
யின்கரை இருபத்து நாலில் ஒன்றது
தென்கரை என்பதோர் செல்வநாடது'

என்று வேளாள புராண ஆசிரியர் வீராச்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர் இந்நாட்டைப் புகழ்வார்.

'நீதிசேர் தென்கரைநாடு ஆகும் என்றார்
நிறம்புகல்வி கற்றபெரும் புலவர் தாமே'

என்பது ஊர்த்தொகைப் பாடல் பகுதி.

'கொங்கில்உயர் பெற்றுவளர்
தென்கரை'

என்பார் சந்தக் கவிதையால் சண்முகப் பெருமான் புகழ்பாடிய அருணகிரிநாதர்.

'தேனூறும்
பூமடந்தை வாழுமொரு பொன்னுலகம் நேரான
நாமகள்வாழ் தென்கரை நன்னாடு'

என்று இரத்தினமூர்த்தி விறலிவிடுதூது என்னும் நூல் புகழுகிறது.

'வாசமலர்சூழும் மணிப்பொய்கை மிக்குளதாய்
பேசும் இனியவயல் பெற்றுளதாய்- ஈசனருள்
பேணும் தருமநிறை பெற்றம் நிரைதழுவிக்

காணும் புனிதம் கவினியதாய்-ஆண்கள்எலாம்
மாமதன ராக மகளிர் ரதியர்எனும்
சேமநலம் பெற்றஉயர் சீர்மருவி- மாமணத்து
முப்பழத்து நற்சுளையும் மூசுவண்டு சுற்றுநல
வெப்பிலியசோலை மிகத்தழுவி- எப்பவும்நற்
பொன்னாடு போலப் பொலியும்
பெருமைமிகும்
தென்கரை என்றுஓதும் திருநாடு'

என்பது குருபரன் ஆற்றுப்படை என்ற நூலின் பகுதியாகும். தாராபுரம் 'வடக்குத் தலைவாசலுக்குச் சேர்ந்த தென்கரை நாடு' என்பது கொங்குப் பட்டய வரிகளாகும். அலகுமலைக் குறவஞ்சி 'புகழ் விளங்கும் தென்கரைசை' என்று கூறுகிறது.

'செங்கண்மால் கிருபையால் அனுதினமும்
வாழ்வான
தென்கரசை நாடு தானே'

'செழுவண்மை நாலாறு நாட்டுக்கு முதலான
தென்கரசு நாடு'

என்பன தனிப்பாடல் பகுதிகளாகும்.

மற்றொரு தனிப்பாடல் தென்கரைநாட்டின் பல்வேறு பெருமைகளைத் தொகுத்துக் கூறுகிறது.

'கொற்றவர்கள் நாடுகாண்மேடையில் பலி
கொடுத்தது,
மூவேந்தரால் சிறப்புப் பெற்றது,
பொன்னூஞ்சல் பூந்தேர் பெற்றது,

மிளகு பயிறானது,
இளையான் கவிராயர் அப்பரமேயர்
தலபுராணம் பாடியது,
கொங்கணரால் ஊதியூரில் பொன்
விளைந்தது,
பகைவரை வென்று மனுநீதி புரந்தது'

ஆகிய தென்கரை நாட்டின் பெருமைகளைத் தொகுத்துக்கூறி கொங்கு இருபத்துநான்கு நாடுகளில் தென்கரை நாடே மேலானது- முதன்மையானது என்று கூறுகிறது.

கொற்றவர்கள் பவனிமுன் வெட்டுமென
மகிமைக்
கொடும்பலி கொடுத்தநாடு
கொங்குமண் டலத்தில்உயர் முப்பெரு
வரிசையும்
கொண்டாட வந்த நாடு

வெற்றிபுனை பொன்னூஞ்சல் பூந்தேரு
வரிசையும்
மிகவிருது பெற்றநாடு
மிளகுபயி றாகவும் குடதிசையெ
லாம்பொருளை
விளங்கஅருள் பெற்ற நாடு

கற்றவர்கள் உரைசெய்யும் இளையநா
யகம்மதுரக்
கவிமழை பெய்யும்நாடு

கனகமது விளைவாய பொன்னூதி
வெற்பினுயர்
காரணர் உறைந்த நாடு
செற்றவர் குறும்பினை அடக்கியே மனுநீதிச்
செங்கோல் புரக்கும்நாடு
செழுவளமை நாலாறு நாட்டுக்குள் மேலான
தென்கரைசை நாடுதானே!

என்பது அச்சிறப்புமிகு பாடலாகும்.

தென்கரைநாட்டில் வேறு அரிய பல நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன. தென்கரைநாட்டுநாட்டுப் புரவலராகத் திகழ்ந்த வேளாளகுல வள்ளல் ஒருவர், புலவர் கன்னத்தில் அடிக்கப் பொறுத்துக் கொண்டார். வேறு ஒரு வள்ளல் நீசனைக் கூட வைத்து உண்டார். தென்கரைநாட்டு ஊதியூர் மலையில் கருநொச்சி, வெண்சாரை மூலிகை விசேடம் உள்ளது. இங்குதான் கொங்கு 24 நாடு பிரிவினை செய்யப்பட்டது. இங்கு வேள்விகள் நடைபெற்றன. இளையான் கவிராயர் போன்ற புலவர்கள் கவிமழை பொழிந்தனர். உமாவின் பெயர் பெற்ற அம்பாநதி என்னும் அமராவதி இங்கு ஓடுகிறது. இப்படிப்பட்ட பல்வேறு சிறப்புக் களையுடைய தென்கரை நாடு கொங்கு நாட்டின் முதன்மையான நாடு என்று ஒரு பாடல் புகழுகிறது.

ஆதிகப் புலவன் சினந்துகன் னத்திலே
அடிக்கப் பொறுத்தநாடு
ஆலவாய் நீசனைக் கூடவைத்து உண்டுசீர்
அரசமுடி பெற்றநாடு

சோதிகக் கருநொச்சி வெண்சாரை முதலான
திகழ்நலம் பெற்றநாடு
சோழன்முதல் மூவர்வந்து எண்மூன்று
நாடென்று
தொகைபிரித் திட்டநாடு
வேதாக மப்படி ஆரணப் பிரமனார்
வேள்விகள் நடத்தும்நாடு
வேதியர்கள் முன்இளைய நாயகன்
கவிதைமழை
விசேடம் பொலிந்த நாடு
சீதரன் தங்கையெனும் ஆண்பொருநை
யானநதி
தேங்கிச் சிறந்தநாடு
செழுவன்மை நாலாறு நாட்டுக்கு முதலான
தேன்கரசு நாடுதானே!

என்பது அப்பாடலாகும்.

ஆறும் மலையும்

அமராவதி ஆறு

கொங்கு நாட்டு ஆறுகளில் அமராவதி ஆறும் ஒன்று. குருபரன் ஆற்றுப்படை என்னும் நூல் அமராவதி ஆற்றைப் பலபடப் புகழுகிறது.

'பூமிக்கு அணிகலமாய் போற்றும்
பொருள்மிகுந்து
நேமிப் புலனை நிதம்தழுவிச் - சேமித்த
ஐந்திணையும் சேர்த்து அகமும் புறந்தழுவி
பைந்திணையைத் தேனைப் பதம்பார்த்து -
நைந்துறுவார்க்கு
உண்ணீரு மாகி உவந்துறுவார் பாவவினை
மண்ணீரு மாகி மகிதலத்து - எண்ணீன்ற
பாவின் நலம்தெரிந்த பாவாணர் நற்கவிபோல்
தேவின் இனிமை திகழ்ந்திலகி - மூவரினும்
போற்றுதிரு மால்மார்பில் போந்தமுத்து
ஆரம்எனச்
சாற்றுமெழில் சார்ந்து தலைமையுறும் -
ஏற்றுபுகழ்
தான்பொருந்து சீர்கொற்றை சாரும்
உயர்வுடைய
ஆன்பொருந்தம் என்னும் அணிநதி'

என்பது அந்நூல் கூறும் பகுதியாகும்.

நல்ல மங்கையாறு, வரட்டுக் கரையாறு என்பது தென்கரை நாட்டு வழியாக ஓடி அமராவதியில் கலப்பன. அமராவதியுடன் கலக்கும் பிற ஆறுகள் நெழலியாறு, குடவனாறு, சண்முகநதி, சின்னாறு, பாம்பாறு, தேனாறு, குதிரையாறு, உப்பாறு என்பனவாகும். கொற்றனூர் - மறவபாளையம் திருக்கோயில்கட்குத் தீர்த்தமாக விளங்கும் பெருமையும் அமராவதிக்கு உண்டு.

கொங்கு மக்கள் பலர் அமராவதி என்னும் பெயரைத் தம் மக்களுக்கு இட்டு மகிழ்ந்துள்ளனர். கம்பர் வரலாற்றில் பெண்பாற் பெயராக வரும் அமராபதி கொங்கு நாட்டில் ஆடவர் பெயராக வழங்குதல் சிறப்புடையதாகும்.

ஊதியூர் மலை

கொங்கு நாட்டுக் குன்றுதோறாடும் திருமலைகளாம் குமரன் உறையும் மலைகளில் ஊதியூர் மலை ஒன்றாகும். தென்கரை நாட்டின் பிரதான மலை என்று போற்றப்படுவது ஊதியூர் மலை. தென்கரை நாட்டில் உள்ள மற்றொரு மலை நாடுகாணி மலை ஆகும். ஊதியூர் மலை கொங்கு நாட்டுச் சிறப்புள்ள மலைகளில் ஒன்றாகக் கொங்கு மண்டல சதகத்தில் புகழப்படுகிறது. அனுமன் எடுத்துச் சென்ற சஞ்சீவி மலையின் ஒரு பகுதி இம்மலை என்பதால் சஞ்சீவி மலை என்றும் இதற்குப் பெயர் உண்டு.

சொல்லியும் வைகை அலைவாய் பழனிபொற்
கொங்கணவர்
வில்லியும் ஓதி வராகம் தலைமலை
வெண்ணெய்மலை
அல்லியை சென்னி கிரிகஞ்சம் வெள்ளி
அரவகிரி
வல்லியும் ஆனை மலைசூழ் வதுகொங்கு
மண்டலமே!

என்பது கார்மேக் கவிஞரின் கொங்கு மண்டல சதகப் பாடலாகும். கொங்கணச் சித்தர் தவம் செய்து பொன் தயாரித்த காரணத்தால் ஊதியூர் மலை இப்பாடலில் 'பொற் கொங்கணவர்' என்று கூறப்படுகிறது. கொங்கணர் பொன் ஊதிய காரணத்தால் இம்மலை பொன் ஊதி மலை, பொன் ஊதி மாமலை என்னும் சிறப்புப் பெயர்களையும் பெற்றன என்று அப்பரமேயர் தல புராணம் கூறுகிறது. ஸ்வர்ணகிரி என்று ஊதியூர் மலைக்குப் பெயர் உண்டு. (ஸ்வர்ணம் - பொன்)

தாங்கும் யோகச் சமாதித் தபோதனன்
தேங்கும் ஆடகம் சிந்தித் திருத்தலால்
ஓங்கு நாமப்பொன் ஊதி வரைஎனப்
பாங்கு சேர்புகழ் பாரில் பரந்ததால்

என்பது அப்பரமேயர் தலபுராணம் கொங்கணர் சருக்கப் பாடலாகும். (12).

மலையில் உத்தண்ட வேலாயுத சுவாமி எழுந்தருளியுள்ளார். மலையின் இடைப்பகுதியில் முருகன் கோவில் உள்ளது. மலைப்படியின் தொடக்கத்தில் மிகவும் அழகிய மயில் மண்டபம்

உள்ளது. அருகில் உள்ள காங்கேயம் - பழனிப் பெருவழியில் செல்வோர் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கவல்ல அழகுடையது அம் மயில் மண்டபம்.

மலையில் கொங்கணச் சித்தருக்குக் கோயில் உள்ளது. கிழக்குப் புறம் வாயில் உள்ள கோயிலில் கொங்கணச் சித்தர் வடக்கு நோக்கி யோக நிலையில் அமர்ந்துள்ளார். கோயிலில் கொங்கணச் சித்தர் பூசித்த தெய்வ உருவங்கள் உள்ளன. கருப்பணசாமி, முனியப்பன், நாகர், ஆண்டவர் ஆகியோர் உள்ளனர். தினப்பூசை நடைபெறுகிறது. (பவுர்ணமியன்று சிறப்புப்பூசை நடைபெறும்). அங்குள்ள பாறையில் பழனி நாவிதன், காவேரி நாவிதன் பேரு வெட்டிவைத்ததாகவும், செக்கு கிணறு இவை அமைத்ததாகவும் எழுதப்பட்டுள்ளது. அக் கிணறு இன்று மூடப்பட்டு வற்றாத சுனை, நல்ல தண்ணீர் அளிக்கிறது. ஊதியூர் மலையில் கருநொச்சி, வெண்சாரை போன்ற அதிசயங்கள் உள்ளன.

மலையின் தென்புறம் மலைக் கன்னிமார் கோயில் உள்ளது. அக்கோயிலை தாயம்பாளையம் ஐநூத்தாஞ் செட்டியார் வழியினர் நிர்வகித்து வழிபட்டு வருகின்றனர்.

ஊதியூர் மலை புலவர்கள் நாவால் புகழ் பெற்றது.

'சங்கெறியும் நீர்சூழ்ந்த தாரணியில் வந்துதித்த
கொங்கணராம் சித்தர் குடியிருந்த - பைங்கனக
சித்த ரசவாதம் செய்யக் குருமுடித்து
வைத்ததெனும் பொன்னூதி மாமலை'

என்றும்,

விண்தோய் நலமேகம் வீற்றிருக்க
அம்மலைதான்
எண்சேர்ந்த கண்ணன் எழில்நிறமாம்-
கண்ணான
ஆதவனார் காலை அருங்கதிரும்
மேற்றிசையில்
போதும்போ துற்றதாம் பொன்கதிரும் -
மோதுமந்த

மாமலைமேல் உற்றாலம் மாசில்லா
அம்மலைதான்
சேமமுற மேருமலைச் சீரணையும்-
பூமழைபோல்
பூந்தண் ணிமம்வீழப் பொற்பமையும்
அம்மலைதான்
தீந்தன் இமயமலைச் சீரையுறும் -
வாய்ந்தஅதில்

சோதி நிலைபோலத் தோன்றியும்தோன்
றாதுமவன்
மீதிருக்கும் பறப்பல் வியன்சுனைகள்-
போதமிகும்

மாதவரும் சித்தர்களும் மாதவஞ்செய்
தாங்கமர்ந்து
போதவா னந்தசுகம் பெற்றிடுவார்-
மோதுகுரல்

வெற்பெனவே மிக்குயர்ந்து மேவுமுரற்
காலமைந்து

கொற்பயிலும் யானைகளும் கூர்ந்திடுமாம்
பொற்புமிகும்
நல்லரச வாதமெனும் நன்னூல்தேர்
கொங்கணராம்
வல்லசித்தர் பச்சிலைகொள் மாசாற்றால் -
தொல்மலையின்
மன்னோர் குகையிருந்து மாசுபடு செம்புமுதல்
பின்னுள்ள லோகமெல்லாம் பேணியே
மண்கலத்தில்
வைத்துமண் சேலைசுற்றி மன்னும்அனல்
ஏற்றியன்று
மெய்த்துருகி நின்று வெகுசெபங்கள்
செய்துநல
மன்னூதி யன்று மலைமலையாய்ப்
பொன்குவித்த
பொன்னூதி என்ற புகழ்மலை'

என்றும் புலவர்கள் ஊதியூர் மலையைப் புகழுவர்.

ஊதியூர் மலையில் தர்ப்பச் சுனை, பொன் படர்ந்த பாறை, குமரன் கணவாய், ஏணிக்கல், மாமியார்மருமகள் பாறை, நரிக்கல்பாறை, சண்டாக்கல் என்று பல்வேறு பகுதிகட்குப் பெயர்கள் வழங்குகின்றன. அங்கு சந்தனமரம், நாய்குட்டி காய்க்கும் மரம், சோதிப்புல் ஆகியவை உள்ளன என்றும் கூறுகிறார்கள்.

அமராவதி ஆறும், ஊதியூர் மலையும் தென்கரை நாட்டுக்கு அணி செய்கின்றன.

கொற்றனூரும் கொத்தனூரும்

தென்கரை நாடு, பூந்துறை நாடு போலக் கொங்கில் முதன்மையான நாடு. நீதிசேர் தென்கரை நாடு என்று சிறப்பிக்கப்பட்டது. பன்னிரண்டு ஊர்களைக் கொண்ட தென்கரை நாட்டுக்குத் தலைமைத் தலம் கொற்றனூர்: தென்கரை நாட்டை முதலில், ஆட்சிபுரிந்தவர்கள் குழாய குலத்தார்கள். அவர்கள் தலைநகரம் தற்போதைய வெளவால் கொத்தனூர். சங்கரண்டாம் பாளையத்துப் பெரியகுல வேணாடுடையார் தென்கரை நாட்டிற்கு அதிபதியாக விளங்கியதால் அவர்களுக்குக் கொற்றனூர் (சங்கரண்டாம் பாளையம்) தலைநகராக விளங்கியதை வரலாறு கூறுகிறது. ஆகவே தென்கரை நாட்டிற்கு இருவேறு காலங்களில் கொத்தனூர் (வெளவால்) கொற்றனூர் (அடுக்குக்கல்) இரண்டுமே தலைநகராக விளங்கியுள்ளன. ஆகவே தென்கரை நாட்டின் தலைநகராக இருந்த கொற்றனூர்ப் பெருமை இரண்டு ஊர்களுக்கும் சேரும் என்பது தெளிவு.

கொற்றனூர் இலக்கியப் புகழ் உடையது. சிறப்பாகக் கொற்றை என்றும் அவ்வூர் குறிக்கப்பெறும்.

'வண்டாடும் பூங்கொற்றை'
'எழிலார் கொற்றை'

'கூடம்சூழ் கொற்றைப்பதி'
'தென்கொற்றை மாநகர்'
'கன கொற்றை'
'யோகம் மிகும் கொற்றையூர்'
'திருவளர் கொற்றை'
'வெற்றிபலவுடைய வேளிர்குலம் தாம்
செறியும் கொற்றைநகர்'
'புகழ் கொற்றை மாநகர்' 'ஏர் கொற்றை'
'கல்லா தவரைக் கடிந்துகலை கற்றுணர்ந்த
நல்லார் உலவுகொற்றை நன்னகர்'
'கொற்றையம்பதி'
'கோதிலாக் கொற்றனூர்'

என்பன கொற்றனூரைப் போற்றும் இலக்கிய வரிகளாகும்.

காவலர், குழாயகுலம், பெரியகுலம், ஆந்தைகுலம், சேரன்குலம், செம்பூத்தகுலம், செட்டியார் ஆகியோர் கொற்றனூருக்குரிய காணியாளர்கள். இவர்கள் ஏழு முதன்மையர் எனப்படுவர்.

ஏழு முதன்மையரில் வேளாண் பெருமக்களில் குழாய குலத்தார் முதல் காணியுரிமை கொண்டவர்கள். இரண்டாவது காணியுரிமை படைத்தவர்கள் பெரிய குலத்தினர். கரிகாலன் மாமா இரும்பிடத்தலையார் வழிவந்த வேணாடர் இரத்தினகிரி, சிவாயம் காணியுரிமை பெற்று ஆட்சிபுரிந்தனர். வேணாடரில் பிடாரன் வேணாடுடையான் பேரன் பிள்ளை வேணாடுடையார்,

'தென்கரை நாட்டுக் கிராமம் பன்னிரண்டில் கொற்றைனூர்க்குச் சேர்ந்த சங்கரண்டாம்பாளையம் கிராமம், அஞ்சாநல்லூர் கிராமமும் இந்த ரண்டு கிராமமும் கிளமேல் ஆறுனாளிகை, தென்வடல் நாலுனாளிகை வளிக்குப்பட்ட ரெண்டு கிராமமும், நறயனூர் நாட்டுக்குச் சேர்ந்த சோளமாதேவி கிராமமும்... தென்கரை நாட்டு மகமையும்' பெறுகிறார்.

சேரரும், சோழரும், பாண்டியரும் தென்கரை நாட்டுக்கு நாடுகாண் மேட்டுக்கு வரும்போது 'திட்டிக்கிடாயி நேர்படாத படியினாலே' பூந்துறையில் பட்டம் ஆண்ட பிடாரன் வேணாடுடையார் பேரன் வேணாடுடையார் தன் பிள்ளையை வெட்டித் திட்டி கழித்தார். அதனால் மூவேந்தர் மகிழ்ந்து மூவேந்தர் சார்பாக இப்பகுதியை ஆளுமாறு செய்து மும்முடிப் பட்டம் அளித்தனர். தென்கரை நாட்டுக்கு வேணாடுடையார் மரபினர் தலைவர் ஆயினர்.

திட்டிக் கிடாய் கொண்டு வந்து நாடுகாண் மேட்டில் வெட்ட வேண்டியவர்கள் கொத்தனூர் முதல் காணியாளர் ஆகிய குழாய குலத்தினர். இதனால் அதுவரை நாட்டு முதன்மை குழாய குலத்தாருக்கே உரியதாக இருந்தது பெறப்படுகிறது.

குழாய குலத்தில் மூத்தவர் தேவண்ணாக் காணியாளர் வேளாராசிப் பகுதியிலும், இளையவர் கருப்பண்ணாக் காணியாளர் கொத்தனூர் பிரமியம் - மாந்துறை இடைப்பட்ட பகுதியிலும் அதிகாரம் செலுத்தியமையாலும், அமராவதியாற்று வெள்ளப்

பெருக்கினாலும் திட்டிக் கிடாய் கொண்டுவரத் தாமதம் ஆயிற்று என்று செவிவழிச் செய்தி.

முதல் கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர் அப்பிரமேயர் தேர் ஓடும் பொருட்டு வேணாடர் தன் பிள்ளையை வெட்டிப் பலி கொடுத்தார் என்று தன் சதகப் பாடலில் கூறுகிறார் (எண் 94). இது மற்றொரு அரிய நிகழ்ச்சி.

'கொற்றையில் வீற்றருள் அப்பர மேயர்
கொடிஞ்சிசெலப்
பெற்றதன் பிள்ளையை வெட்டி விட்டான்'

என்பது அப்பாடல் பகுதியாகும்.

திட்டிக்கிடாய் வெட்டி நாடு காண் மேட்டில் மூவேந்தரை வரவேற்கத் தவறியதால் குழாய குலத்தவர் தங்களது உரிமையை இழந்ததும், பெரிய குலத்து வேணாடுடையார் மரபினர் தென்கரை நாட்டிற்கு முதன்மை பெற்றதும் சிறப்ப, செவிவழிச் செய்தியாகும். இதனால் குழாய குலத்தவர்கள் தென்கரை நாட்டிற்கு முதல் உரிமை பெற்றிருந்தனர் என்பது விளங்குகிறது. அவர்களின் முதன்மைத் தலைநகர் கொத்தனூர் என்பதும் தெளிவு.

வரலாற்றுச் சிறப்புமிக்க கொத்தனூர் மரங்கள் அடர்ந்து பெரும் காட்டுப் பகுதியாக விளங்கியது. அதனால் அங்கு வெளவால்கள் மிக அதிகமாக இருந்தன. அதனால் கொத்தனூர் 'வெளவால் கொத்தனூர் என்று பிற்காலத்தில் குறிக்கப்படலாயிற்று.

ஆகவே பழம் பெருமை வாய்ந்த கொத்தனூர்க் காணியாளர் குழாய குலப்பெருமக்கள் கொற்றனூர்க் காணியாளரில் இரண்டாவது முதன்மையும், தென்கரை நாட்டின் கொத்தனூர்த் தலைமையும் முதல் உரிமையும் பெற்றுள்ளனர் என்பது கல்வெட்டு, செப்பேடு, பட்டயம், வரலாறு, செவிவழிச் செய்தி ஆகிய அனைத்துச் சான்றுகளாலும் தெளிவாகிறது.

அருள்மிகு ஸ்ரீகொத்தனூர் அம்மன் என்ற காரியகாளியம்மன்

கொத்தனூர்க் காணியாளர் குழாய குலத்தாரின் கண்கண்ட தெய்வமாக விளங்குவது வாழ்வின் முழுமுதற் பொருளாகிய அருள்மிகு கொத்தனூர்க் கரியகாளியம்மன். காணியாளர்களின் வாழ்விற்கும் வளத்திற்கும் மூலகாரணமாக விளங்கும் அன்னை ஸ்ரீகொத்தனூர் அம்மன் என்ற கரியகாளியம்மன். இவ்வுலக வாழ்வை ஈடேற்றி வேண்டுவோர்க்கு வேண்டியவற்றை வேண்டியாங்கு அருளும் வழிகாட்டியாக வடவாயிற் செல்வியாக மிகமிகத் தொன்மையான எழில்மிகும் சிற்ப வடிவில் வீற்றிருந்து அருள்புரிபவள் கொத்தனூர்க் கரியகாளி அன்னை.

அன்னை சக்தியைக் காளியாக வழிபடுவது சிறப்பு அம்சமாகும். காளி, மாகாளி, பொன்காளி, ஓங்காளி, மதுரகாளி, கவையகாளி எனப் பல பெயரிட்டு அன்னை பராசக்தியை அழைக்கிறோம். கரியகாளி என்பது அவற்றுள் மிகச்சிறப்புமிக்கதாகும். கரியகாளியைப் பற்றிய தனிப்பாடல்களில் பார்வதி, உமாதேவியின் அம்சம் கரியகாளி என்று கூறப்படுகிறது.

கொங்கு வேளாண் பெருமக்கள் பலரும்,

'ஏகசட தாரிகுறள் கூளிகள் இலங்கப்
பாகரிய சொல்லின்மொழிப் பாவையர்கள் கூடி
நாகசுரம் மேளம்மணி நாதமும் முழங்க
மாகரிய காளிபதம் வாழ்த்துதுதி செய்வாம்'

என்று கரியகாளியம்மனை வணங்கிப் பேறு பெறுகின்றனர். பல நாட்டுப் பிரிவுகளில், பல ஊர்களில், பல குலத்தார் வணங்கும் கரியகாளியம் மனைக் கொங்கு நாட்டுத் தேசியத் தெய்வங்களில் ஒன்றாகக் கருதலாம்.

கொத்தனூர் அம்மன் கோயிலுக்குச் சேர்ந்த நிலபுலன்கள் நிறைய இருப்பதாகவும் அதை அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பாதுகாத்து வருவதாகவும் தெரிகிறது. கொத்தனூர் அம்மன் கோயிலைச் சேர்ந்த ரெவின்யூ ரிக்கார்டுகளில் 'கொத்தனூர் கரிய காளியம்மன்' என்றே உள்ளது.

அருள்மிகு கொத்தனூர் கரியகாளியம்மன் கோயில் பல திருப்பணிகள் பாங்குடன் பெற்றுப் பொலிவுடன் இன்று திகழ்வதைக் காணும்போது தென்காசி அரிகேசரி பராக்கிரம பாண்டியன் பாடிய பாடல் நம் நினைவிற்கு வருகிறது.

'சேலே றியவயல் தென்காசி ஆலயம்
தெய்வச்செய
லாலே சமைந்ததிங்கு என்செயல் அல்ல
அதனைஇன்னும்
மேலே விரிவுசெய் தேபுரப் பார்அடி
வீழ்ந்து அவர்தம்

பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம
பாண்டியனே'

என்பது அப்பாடலாகும்.

தென்பாண்டி நாட்டுத் தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தான் அமைத்த அக்கோயிலைப் பராமரித்துத் திருப்பணி செய்து விரிவு படுத்தும் அன்பர்கள் திருவடிகளில் விழுந்து வணங்குவதாகப் பாடிய பாடல் நம் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்ததாகும்.

கரியகாளியம்மன் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், விசாலமான மகாமண்டபம் ஆகியவற்றுடன் திகழுகிறது. மகாமண்டபத்தில் 10 தூண்கள் அழகிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப் பட்டுள்ளன. அத்திமரம் தலவிருட்சமாக உள்ளது. பாறையும் மேடுமாக உள்ள இடத்தில் அமைந்துள்ள கோயில். புதிய திருப்பணியால் மேடுகள் சரிசமமாக்கப்பட்டுள்ளன. ஊஞ்ச மரங்கள் சில கோயில் எல்லையுள் உள்ளன.

அடியார்க்கு அருளும் அன்னையாகிய கரியகாளியம்மன் எட்டுத் திருக்கரங்களுடன் இடப்புறக் கைகளில் நாகம், கேடயம், மணி, கபாலம் தாங்கியும், வலப்புறக் கைகளில் முத்தலைச் சூலம், உடுக்கை, பாசம், கத்தி தாங்கியும் காதுகளில் குழையுடன் தீயசக்தியாகிய அரக்கனை அழிக்கும் கோலத்தில் வீற்றிருந்து அருள்புரியும் நிலையில் எழுந்தருளியுள்ளார்.

மாசிமாதம் பவுர்ணமியையொட்டித் திருவிழா நடைபெறும். வெள்ளியன்று பூச்சாட்டி, திங்கள் படுகளம், செவ்வாய் பொங்கல், புதன் மஞ்சள் நீராட்டுடன் விழா முடிவுபெறும். திருவிழாவில் குழாய குலக் காணியாளர்களும் உற்றார் உறவினரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொள்வர்.

கொத்தனூர் அம்மனும் - திருப்பணிக் கமிட்டியும்

கொத்தனூர்க் குழாயகுலக் குலதெய்வம் கரியகாளியம்மன் கோயில் மிகப் பழையதாகவும் காணியாளர்கள் வந்து கூடி வணங்கப் போதுமான இடவசதியில்லாமலும் இருந்தது. காணியாளர்களில் ஆர்வமுடைய அன்பர்கள் ஒன்றுகூடிக் கொத்தனூர் கரியகாளியம்மன் கோயிலைத் திருப்பணி செய்ய முடிவு செய்தனர். ஸ்ரீமுக வருடம் தைமாதம் 11 ஆம் தேதி (24.1.1994) பாலாலயம் அமைத்தனர். 27.1.1994 அன்று பாலக்கால் நட்டுத் திருப்பணியைத் தொடங்கினர். காணியாளர்களில் குறிப்பாகத் தாராபுரம் பகுதியைச் சேர்ந்த திருவாளர்கள் ஆர். பாலாமணி, ஆனந்தா வி.பழனிசாமி மற்றும் என்.இராமசாமி ஆகியோர்களது அயரா உழைப்பாலும் ஆர்வத்தாலும், பெருந் தலைவராக உள்ள மேல்கரைப்பட்டி ச. குமாரவேல் கவுண்டர் அவர்களது ஆசியாலும் குடிபாட்டுக் காணியாளர்களான குழாய குலத்தாரில் தாராள நன்கொடையாலும் கரியகாளியம்மன்கோயில் திருப்பணி சிறப்புடன் முடிவுற்று ஈசுவரவருடம் தைமாதம் 19ஆம் தேதி (1.2.1998) அன்று குடமுழுக்குச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

குலதெய்வக் கோயிலுக்கு வரும் குழாயகுலக் காணியாளர்கள் பலரும் திருப்பணியில் பங்கு பெற்றுள்ளனர். ஒரு புதிய கோயில் கட்டுவதைக் காட்டிலும் பழைய கோயிலைத் திருப்பணி செய்வது நான்கு மடங்கு புண்ணியத்தைத் தரும் என்று காஞ்சிப்புராணம் சிவபுண்ணியப் படலப் பாடல் கூறுகிறது.

'முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவும்
தெரிந்து முன்னையில் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர் பெறும் புண்ணியம் நான்மடங்கு உறுவர்.'

என்பது அப்பாடலாகும். பழைய கோயில்களைப் புதுப்பித்துக்

'கல்லினால் அமைத்த பேர்கள்
கயிலை விட்டு அகலார்தாமே'

என்பது ஒரு பழம்பாடல் பகுதி. தவத்திரு சிரவணம்பட்டி கௌமார மடாலயம் சுந்தரசுவாமிகள் போன்ற சமயப் பெரியார்களை அழைத்துத் தக்க அறிவுரை பெற்று, தகுதிவாய்ந்த சிற்பம், கட்டிடக் கலை வல்லாரைக் கொண்டு கொத்தனூர்க் குழாய குலத்தார் திருப்பணி வேலைகளை மிகவும் திறம்படச் செய்துள்ளனர். பண்டைய கோயில் அமைப்புக்களைப்

படம் எடுத்துப் பாதுகாத்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

அரிதின் முயன்று தண்ணீர் வசதி செய்து நந்தவனம் அமைத்துள்ளனர். ஆண்டிகாடு, மோளத்தான் காடு, ஐயர் தோட்டம் என்ற பெயர்கள் பண்டைய பெருமையைக் காட்டுகின்றன. அப்பெயர்கள் கோயிலோடு தொடர்புடையதாய் விளங்குகின்றன.

திருப்பணி, குடமுழுக்கு விழா அறிக்கையில்

'அன்னை பராசக்தி அருள்மிகு கொத்தனூர்
சன்னதியில் நற்பணி சாலவே செய்து
விண்ணோர்கள் போற்ற அஷ்டபந்தன
கும்பாபிஷேகம் செய்திட
முன்னே அருள் செய்குவாய் முழுமுதல்
கணபதியே'

என்ற பாடலை அச்சிட்டுத் தம் ஆர்வத்தையும் பக்தியையும் புலப்படுத்துகின்றனர். கொத்தனூர்க் கரியகாளியம்மனை வனகாளியம்மன் என்றும் அழைப்பர்.

கரியகாளியம்மன் கோயிலில் விநாயகர், கன்னிமார், கருப்பணசுவாமி சன்னதிகள் உள்ளன. விக்கினங்களைத் தீர்ப்பவர் விநாயகப் பெருமாள் ஆவார்.

கரியகாளியம்மன் கோயிலில் கன்னியாத்தாள் சன்னதிக்குத் தனிச்சிறப்பு உண்டு. ஏழு என்பது பண்டைக் காலத்தில் ஒரு முக்கியமான எண்ணாகக் கருதப்பட்டது. மிகவும் இன்றியமையாத பொருள்களை

ஏழாக வகுத்துக் கூறுவது பழந்தமிழர் மரபு. இறைவனையே,

'ஏழிசையாய் இசைப்பயனாய்'

வழிபட்டவர்கள் தமிழர்கள். உலகை ஏழுலகம் என்றனர். கடல், ஆறு, நாள், தலம் ஆகியவைகளை ஏழாகவே வகுத்தனர். சிறப்பான அன்னையர் வழிபாட்டையும் 'தாய்மார் எழுவர்' என்று வழிபட்டனர். மிகவும் தொன்மையான வழிபாடாகவே சப்தமாதர் - கன்னிமார் வழிபாடு விளங்கியது. கன்னிமாரையே கன்னியாத்தாள் என அழைக்கின்றனர்.

பிங்கலந்தை நிகண்டு சப்த கன்னியரை பிராமணி, நாராயணி, மாகேஸ்வரி, கௌமாரி, வராகி, உருத்திரகாளி, இந்திராணி எனக் குறிக்கும். சூடாமணி நிகண்டு பிராமி, வயிசுவானி, மாகேஸ்வரி, கௌமாரி, வாராகி, மாகாளி, மாகேந்திரி எனச் சிறிது வேறுபாட்டுடன் விளக்கும். கொத்தனூர் கரியகாளி அம்மன் கோயிலில் கன்னியாத்தாள் எழுவராகவே அமைக்கப்பட்டுள்ளனர். கன்னிமார் கோயிலுக்கு மாசிமாதம் பொங்கல் விழா எடுக்கின்றனர். கன்னிமாருக்கு மட்டும், குழாயகுல பூசாரிக் கவுண்டர் பூசை செய்கிறார். குலத்தைச் சார்ந்தவரே பூசித்து வருவதால் ஸ்ரீகன்னிமார் சுவாமிகள் குலத்தைச் சார்ந்த மூதாதையோரே தெய்வமாக வைத்து வழிபட்டு இருக்கலாம் என்று எண்ண இடம் இருக்கிறது. மேலும் குலத்தைச் சார்ந்தவர்களும், பிற குலத்தோரும் மிகவும் பயபக்தியுடன் வழிபட்டுவரும் கொத்தனூர்

ஸ்ரீகன்னிமார் சுவாமிகள் மிகவும் சக்தி வாய்ந்தது என்று அந்தப்பகுதிமக்கள் சொல்வதில் இருந்து விளங்குகிறது.

கருப்பணசாமி கரியகாளி அம்மன் கோயிலின் காவல் தெய்வமாகும். கருப்பணசாமி விஷ்ணுவின் அம்சமாகவே வணங்கப்படுகிறார்.

பரம்பரைக் கொங்குப் பண்டாரம் குடும்பத்தினர் முறைப்படி கரியகாளியம்மன் திருக்கோயிலில் பூசை செய்து வருகின்றனர். திருப்பணிக்கமிட்டியினரால் பக்தர்களுக்கு எல்லா வசதிகளும் சிறப்புடன் செய்து தரப்பட்டுள்ளன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வழிபாடு இன்றி சிதைந்து விட்ட பழம்பெருமை வாய்ந்த சக்தி மிகுந்த ஸ்ரீ அம்மனின் ஆலயத்தைக் குலத்தைச் சார்ந்த திருப்பணிக் கமிட்டியினர் அரும்பாடு பட்டு புதுப்பித்துள்ளனர். ஆரம்பத்தில் நிராதரவாக இருந்த ஆலயம் தற்போது புதுப்பொலிவுடன் மூன்று நிலைக் கோபுரத்துடன் எழுந்து அருள்பாலிக்கின்றது. சிதறிக் கிடந்த குலத்தார்களை ஒன்று சேர்த்துத் திருப்பணியை திறம்படச் செய்து முடித்து குலத்தார்களிடம் "மும்மூர்த்திகள்" என்ற பெருமை பெற்ற திருப்பணிக் கமிட்டித் தலைவராக உள்ள ஆர். பாலாமணி அவர்களையும், செயலாளராக உள்ள ஆனந்தா வி. பழனிசாமி அவர்களையும், பொருளாளராக உள்ள என். இராமசாமி அவர்களையும், குலத்தார்களும், ஆன்மீகப் பெருமக்களும் பாராட்டி மகிழ்கின்றனர். அவர்களது தெய்வீகப் பணி தொடர அன்னை ஸ்ரீகொத்தனூர் அம்மன் அவர்களுக்கு எல்லா நலன்களும் வளமும் நல்க வேண்டுகிறோம்.

கொத்தனூர்க் கோயில்கள்

வரலாற்றுச் சிறப்புமிக்க கொத்தனூரில் குழாய குலக் குலதெய்வம் அருள்மிகு கரியகாளியம்மன் கோயில் புதிய திருப்பணிகள் பல பெற்றுப் பாங்குடன் திகழுகிறது. அக்கோயில் வளாகத்திலேயே விக்கினங்கள் தீர்க்கும் மூத்த பிள்ளையாரான விநாயகர், கருணைத் தெய்வம் கன்னிமார், காக்கும் காவல் தெய்வம் கருப்பண்ணசாமி ஆகியோர் சன்னதிகள் உள்ளன என்றும் முன்பு கண்டோம். கன்னிமார் எனப்படும் கன்னியாத்தாள் கோயிலும், கருப்பண்ணசாமி கோயிலும், தனிச்சன்னதியாகக் கிழக்கு நோக்கிப் புதிய பொலிவுடன் கட்டப்பட்டுள்ளன.

கொத்தனூரில்

காசிவிசுவநாதர் கோயில்
முருகன் கோயில்
பெருமாள் கோயில்
அண்ணன்மார் கோயில்
மாரியம்மன் கோயில்
மாகாளியாத்தாள் கோயில்
பட்டத்தலைச்சி கோயில்
நாகாத்தாள் கோயில்

ஆகிய கோயில்கள் உள்ளன.

இவற்றுள் காசிவிசுவநாதர்கோயில், விசாலாட்சியம்மன் கோயில், முருகன் கோயில், பெருமாள்கோயில் ஆகியவை கரியகாளியம்மன் கோயில் அருகில் முன்புறம் இடப்பக்கத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. அவை கரியகாளியம்மன் கோயில் பரிவார தெய்வக் கோயிலாகவே கருதப்படுகின்றன.

காசிவிசுவநாதர் விசாலாட்சி கோயில்

காசிவிசுவநாதர் கோயில் கரியகாளியம்மன் கோயிலுக்கு முன்பக்கம் கிழக்கு நோக்கிப் பாறைமீது அமைந்துள்ள சிறுகோயில். சிறிய சிவலிங்கம் உள்ளது. சிவலிங்கம் தமிழ்நாட்டு அமைப்பில் இல்லை. கொத்தனூர்க் காணியாளரின் முன்னோர் யாராவது காசிக்குச் சென்று இலிங்கம் கொண்டுவந்து தம் காசியாத்திரையின் நினைவாக இங்கு காசிவிசுவநாதரைப் பிரதிட்டை செய்திருக்கலாம். கொங்கு நாட்டின் பல ஊர்களில் காசிப்பயணத்தின் நினைவாக இலிங்கம் பிரதிட்டை செய்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. சிறிய நந்தியும் உள்ளது. காசிவிசுவநாதர் என்ற பெயர் உள்ளமையால் மேற்கண்ட நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம்.

முருகன் கோயில்

காசிவிசுவநாதர் கோயில் அருகிலேயே முருகனுக்குத் தனிக்கோயில் உள்ளது. பழுதடைந்த முருகன் கோயில் புதிய திருப்பணி பெற்று விளங்குகிறது. முருகன் திருவுருவமும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இடம் மாறியிருந்த மயில்வாகனம் மீண்டும் முருகன் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

பெருமாள் கோயில்

காசிவிசுவநாதர், முருகன் கோயிலுக்குச் சற்றுத்தள்ளிப் பெருமாளுக்குத் தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலும் பாறைமீது அமைக்கப்பட்டு உள்ளது. கருவறை, அர்த்தமண்டபம் மட்டும் உள்ளன. சுதை வேலைப்பாடு மிக்க பழங்கோயில், மிகவும் சிதைந்துள்ளது. விளக்கு மாடங்கள் சில உள்ளன. இக்கோயிலின் முன்பு பலிபீடம், துளசிமாடம் ஆகியவை உள்ளன.

இக்கோயில்களும் திருப்பணிகளைப் பெற்றுள்ளன.

அண்ணன்மார் கோயில்

கொங்கு வேளாளரில் வரகுண்ணாப் பெருங்குடியர் குலத்தில் தோன்றிய பொன்னர், சங்கர் இருவரும் அண்ணன்மார் என்ற பெயரில் கொங்கு நாட்டில் வணங்கப்படுகின்றனர். இவர்களைப் பெரியண்ணன், சின்னஅண்ணன் என்றும் அழைக்கும் வழக்கமும் உண்டு.

குன்றுடையான் - தாமரை நாச்சியாருக்கு மக்களாகப் பிறந்த அவர்கள் நாட்டுக்கும், இனத்துக்குமாகப் போராடி வீர மரணம் அடைந்தனர். தங்கை அருக்காணி - அண்ணன்மார் ஆகியோரிடையே உள்ள சகோதர பாசத்தை அவர்கள் வரலாறு காட்டுகிறது.

அண்ணன்மார் வரலாற்றோடு தொடர்புடைய அருள் தரும் பெரியக்காண்டி அம்மன், தெய்வீகத் தன்மையுடைய மாயவர், மாவீரன் படைத்தலைவன்

சாம்புவன் ஆகியோரும் தெய்வமாக நின்று அருள்பாலிக்கின்றனர்.

வீரவழிபாட்டின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது அண்ணன்மார் வழிபாடு. கொத்தனூரில் அண்ணன்மார் கோயில் சிறப்புடன் விளங்குகிறது. திருவிழாக் காலத்தில் இங்கு படுகளம் விழா சிறப்பாக நடைபெறும். சாம்புவன் வழிபாட்டின்மூலம் சமூக நல்லிணக்கமும், ஒருமைப்பாடும் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

மாரியம்மன் கோயில்

கொங்குக் கிராமங்களில் பெருவாரியாக உள்ள கோயில் மாரியம்மன் கோயில். மாரியம்மனை மழைத்தெய்வம் என்று கூறுவர். கண்ணகி வழிபாட்டின் எச்சம் என்றும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு விழாவோடு சாந்தி செய்ய நீண்ட நாள் பெய்யாதிருந்த மழை பெய்தது என்று கூறப்படுகிறது. கண்ணகி 'கொங்கச் செல்வி' என்று கூறப்படுகிறாள். இக்காரணங்களால் மாரியம்மனைக் கண்ணகியோடு ஒப்பிடுவர். மாரி என்றால் மழை என்பது பொருளாகும்.

'சொன்மாரித் திரிகின்ற அரக்கர்குலம்
தனைத்தடிந்து அவர்கள் வாழ்த்த
கன்மாரி தனைவிலக்கிக் கவிமாரி பொழிந்து
அறங்கள் கருத்தின்மேவப்
பொன்மாரி பொழிந்து இலங்கும் பூமாரி
பொழியும் கொத்தனூர் வாழ்

நன்மாரி அம்மை இரு பதம்பணிவோர்க்கு
இருவினையும் நலியும்தானே!'

என்பது மாரியம்மன் வாழ்த்துப் பாடலாகும்.

நாகாத்தாள் கோயில்

கரியகாளியம்மன் கோயில் எதிரில் இருக்கும் கோயில். நாகர் வழிபாடு திராவிட நாகரிகத்தில் தொன்மையான வழிபாடாகும்.

'காக்கைக்குப் பொங்கல் வச்சுக்
கைமுறிந்து போச்சு
நாகருக்குப் பொங்கல் வச்சு
நல்லாப் போச்சு'.

என்று சிறு குழந்தைகளும் கொங்கு நாட்டில் பாடுகின்றனர்.

தற்போது நாகாத்தாளுக்கும் அம்மனின் ஆலயத்தில் தென்மேற்கில் வடக்குப் பார்த்து இருப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. இது சுவாமியின் ஆணைப்படி நடந்தது.

மாகாளியாத்தாள் கோயிலும், பட்டத்தலைச்சி அம்மன் கோயிலும் இங்குள்ள பிற கோயில்களாகும்.

குழாயர் குலம்

குழாயர் குலம்

கொங்கு வேளாளர் குலங்களில் குழாயர் குலம் என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க குலமாகும். குழாயன் என்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு தலைவர் கொங்கு வேளாளர் இனத்தில் தோன்றியிருக்க வேண்டும். அவருடைய வழியில் வந்தவர்கள் பின்னாளில் தங்களைக் குழாயன் மரபினர் என்பதைக் குறிக்க குழாயன் குலத்தினர் என்று அழைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

'சுமானன் புத்தரசை விளங்கும் குழாயர்'
'காவல் குழாயர் கதித்த பெரியகுலர்'
'கோமான் குழாய குலம்'
'பொன்னர் ஓதாளர் கோத்திரர் குழாயர்'
'குழாயர்குல அவிநாசிவேள்'
'குழாயகுல அவிநாசியப்பன்'
'திருவளர் பொன்னர் சிறந்த குழாயர்'
'தேனே நிறைந்த குழாயர் குலேந்திரன்

என்ற பாடல் அடிகள் மூலம் குழாயர் - குழாய குலம் எனக் குறிக்கப் பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

குழையர் குலம்

'ஞாயம் நிலைபெருக்கும் நற்காவலன்
குழையன்'

'கோவிலூர்க் குழையர்'

'குழையர் பெருங்குடி வந்தோர்'

'பொன்னர் குழையர் புகழ்பெரிய சாத்தந்தை'

போன்ற பாடல் அடிகள் மூலம் குழாயர் குலத்தைக் குழையர் குலம் என்றும் குறிப்பதைக் காணுகிறோம்.

குலம், கூட்டம், கோத்திரம் என்பன ஒரே பொருள்தரும் சொற்களாகும். எனவே குழாயர்குலம் - குழாயர் கூட்டம், குழாயர் கோத்திரம் என்றும் அழைக்கப்பட்டது.

'குழாயர் கூட்டம் என்பது குழை என்னும் சொல் வழியாகத் தோன்றிய பெயராகும். குழை என்பது குண்டலம்; ஆண் மக்கள் காதுகளில் அணியும் நகைக்குக் குண்டலம் என்று பெயர். குழை என்னும் குண்டலத்தை அணிந்தவனைக் குல முதல்வனாகக் கொண்ட குடிக்குக் குழையர் கூட்டம் என்ற பெயர் தோன்றியது. குழை என்பது குழாய், குழாயர் என மாறி ஒலித்தது. குழையர், குழாயர் ஆகிய இரு பெயரும் ஒரே அர்த்தத்தைத் தரும் சொற்களாகும். படைத் தலைவர்களும், கோமக்களும் குண்டலம் அணிந்து கொள்வது அக்கால வழக்கம்' என்பது கொங்குக் குல ஆய்வறிஞர் டி.எம். காளியப்பா அவர்கள் கருத்தாகும்.

கடுக்கன்கள், குண்டலங்கள், தோடுகள் இவை குழை எனப்படுகின்றன. சிவன்கூடத் தோடுடைய செவியன் எனப்படுகின்றான்.

சமுதாய அந்தஸ்து மிக்கவர்கள், ஆட்சி அதிகாரங்கள் பெற்றவர்கள், காதில் மட்டும் அல்ல கழுத்திலும் 'கெவுடு' அணிந்திருப்பர். எனவே இந்தக் குழையணிந்த வேளாளர்களும் பரம்பரை சமூக அந்தஸ்து பெற்றவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது மூதறிஞர் கு. சேதுராமன் அவர்கள் கருத்தாகும்.

குழாயர் குலம், குழாய குலம், குழையர்குலம், குழைய குலம், குளாய குலம், கொளாய குலம் எனப்பல்வேறு வகைகளாக இக்குலம் அழைக்கப் படுகிறது.

பொதுவாக இக்குலத்தார் சமூகத்தில் மிகப் பெரிய மதிப்புப் பெற்றவர்களாக விளங்கியுள்ளனர் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும்.

இலக்கியங்களில்,

'புகழ்சேர் குழாயர்'
'கோதிலாக் குழாயர்'
'சிறந்த குழாயர்'
'தேனே நிறைந்த குழாயர்'

என்று பலவாறு பாராட்டப் பெற்றுள்ளது குழாயர்குலம்.

காணிப்பாடல்

குழாயகுலக் காணிப்பாடல் தனிச்சிறப்புமிக்கது. அப்பாடல் மூலம் குழாய குலத்தார் பரவியுள்ள இடங்களையும் அவர்கள் பக்தித் திறத்தையும் காணுகிறோம்.

காணிப் பாடலில் முதற்கண் குழாய குலத்தாருக்குரிய கொங்கு நாட்டு மலைகள் கூறப் படுகின்றன. அடுத்து உரிய ஆறுகள் கூறப்படுகின்றன.

நாகமலை, சென்னிமலை, கொல்லிமலை, ஆனைமலை, அலகுமலை, பன்றிமலை, ஊதியூர்மலை, பொன்மலை, குடகுமலை ஆகிய மலைகளுடன் காஞ்சி மாநதி, வானிநதி, நல்லாறு, ஆண்பொருநை, லவணம், காவேரி, ஆளியாறு ஆகிய ஆறுகளும் கூறப்படுகின்றன. நாகமலை என்பது கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுத் திருசெங்கோடாகும். லவணம் என்பது உப்பாற்றின் பெயர்.

அடுத்துத் தென்கரை நாடு, அவிநாசி, வைகாவூர், கீழ்க்கரைப் பூந்துறைநாடு, மேல்கரைப் பூந்துறைநாடு, கோயிலூர், விளங்கில், கண்டியன் கோயில், நிழலி, கலியாணி, ஆனையூர், குழாநிலை, குயப்பள்ளி, கருமாபுரம், புத்தரசை, கவசை, நிரையூர், கொற்றனூர் ஆகியன காணி நாடுகளாகவும், ஊர்களாகவும் குறிக்கப் பெறுகின்றன.

இறுதியில் பெரியம்மன் குழாய குலத்தாரைக் காத்துப் பாதுகாக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது. தென்கரைநாடு, கீழ்க்கரைப் பூந்துறைநாடு, மேல்கரைப் பூந்துறை நாடும் காணியாகக் கூறப்படுவது மிகவும் சிறப்புக்குரியது. கொங்கு 24 நாடுகளில் பூந்துறை நாடும், தென்கரை நாடுமே மிகப் பழமையும், பெருமையும் முதன்மையும் வாய்ந்த நாடுகளாகும். இவ்விரண்டு நாடுகளையும் முதலாவதாக வைத்தே நாட்டுப்பாடல் கூறப்படுகிறது. 'பழம் பூந்துறை நாடு'

என்று கல்வெட்டிலும் பூந்துறைநாடு புகழப்படுகிறது. மேல்கரைப் பூந்துறை நாட்டுக் குழாநிலை குழாய குலத்தாரின் முக்கியமான காணியூராகும்.

வளமிலகு நாகமலை சென்னிமலை
கொல்லிமலை
வானிலகு ஆனைமலைசேர்
மாசிலா அலகுமலை பன்றிமலை பொன்னூதி
மலைசெம்பொன் மலைகுடகுடன்

தளமிலகு காஞ்சிமா நதிவானி நல்லாறு
தாழ்வில்ஆண் பொருனைலவணம்
தாங்குநதி காவேரி ஆளியா றுடன்பல
தருமதென் கரைநாடுகாண்

புளகன்ன னவிநாசி வைகாவூர் நாடுகீழ்ப்
பூந்துறை மேல்பூந்துறை
புகழ்கோயி லூர்விளங்கில் கண்டியன்
கோயில்நிழலி
பொற்பலரும் கலியாணியூர்

களபமுள ஆனையூர் குழாநிலை குயப்பள்ளி
கருமாபுரம் புத்தரசை
கவசைநிரை யூர்கொற்றை மேவிய குழாயரைக்
காத்திடும் பெரியம்மனே

என்பது குழாயகுலத்தார் காணிப்பாடலாகும். சிறப்புடைய பொருளைப் பிற்படக் கிளத்தல் என்பதன்படி கொற்றனூர் இறுதியில் வைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியதாகும்.

பொங்கலூர் நாடு

பொன்கலூர் நாடு (பொன்கல்), பொங்கலூர்க்கா நாடு, பொன் குலுக்கி நாடு எனப் பலவாறு சிறப்பிக்கப்படும் பொங்கலூர் நாட்டுக்குரிய காணியாளர்கள் பலரில் மூன்றாவது குலத்தவராகக் குழாய குலத்தினர் குறிக்கப் பெறுகின்றனர். குழாய குலத்தாருக்குரிய புகழ்மிகு புத்தரசை, அலகுமலை, நிரையூர் போன்ற ஊர்கள் பொங்கலூர் நாட்டில் உள்ளன.

பொன்னர் ஓதாளர் கோத்திரர் குழாயர்
பொருந்து சாத்தந்தை செம்பர் செம்பூதர்
கண்ணர் மாடையும் பூசனும் வெண்டுவர்
காடை செங்கண்ணர் பொருளந்தை பயிறர்
எண்ணை ஆந்தை கோவேந்தர் பனங்காடை
இப்படிச் சிறத்து ஓங்கியே இருக்கும்
இன்னம் நற்குல வேளிர்கள் வாழ்வுற்று
இருக்கும் பொங்கலூர் நாடெங்கள் நாடே

என்பது அலகுமலைக் குறவஞ்சியில் காணப்படும் பொங்கலூர் நாட்டுப் பாடலாகும்.

ஏழு முதன்மை

காவலர்குலம், குழாயகுலம், பெரியகுலம், ஆந்தை குலம், சேரர்குலம், செம்பூத்தகுலம், செட்டியார் ஆகிய ஏழு முதன்மை கொற்றனூர்க்கு உண்டு என்று காணிப்பாடல்கள் கூறுகின்றன.

காவலர்குலம் என்பது வேட்டுவ குலத்தாரைக் குறிக்கும். அவர்கள் காவல், காவிலுவர் என்றும்

அழைக்கப் பெறுவர். காவிலுவர், மாவிலுவர், பூவிலுவர், வேடர், வேட்டுவர் என ஐந்து பிரிவாக அக்குலத்தார் அழைக்கப் பெறுவர். இப்பகுதியில் பூர்வீக உரிமை பெற்றிருந்தவர்கள். அவர்களிடமிருந்தே இத்தென்கரை நாட்டுப்பகுதியில் முதல் உரிமை குழாய குலத்தாருக்கு மாறுகிறது. இறுதியில் செட்டியார் குலத்தார் காணியாளர்களாகக் கூறப்படுகின்றனர். தென்கரை நாட்டின் 12 ஊர்களுக்குச் செட்டியார்கள் காணியாளர்களாக உள்ளனர். இது தென்கரை நாட்டின் வணிகச் சிறப்பைக் காட்டுகிறது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டுப் பிரான்மலையில் கூடிய மாபெரும் வணிகர் மையத்திற்குக் கொங்கு நாட்டிலிருந்து சென்ற ஆறு ஊர் வணிகர்களில் தென்கரை நாட்டு கெடித்தலமான தாராபுரம் வணிகர்களும் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'காவல் குழாயர் கதித்த பெரியகுலர்
ஆவல்சேர் ஆந்தை அதிசேரன் -மேவியசீர்
செம்பூதன் செட்டியுடன் தென்கொற்றை
மாநகர்க்கு
இன்புற்ற ஏழ்முதன்மை யே'

'ஞாயம் நிலைபெருக்கும் நற்காவ லன்குழையர்
நேயப் பெரியகுலர் நீள்ஆந்தை - ஆயன்
திருவளர் கொற்றைக்குச் சேரன் செம்பூதன்
பெருகுசெட்டி யும்காணிப் பேர்'

என்பன கொற்றனூரின் ஏழ் முதன்மையைக் குறிக்கும் பாடல்களாகும்.

குழாயர் நிலை- குழா நிலை

மேல்கரைப் பூந்துறைநாட்டின் 32 ஊர்களில் பத்தாவதாகக் குறிக்கப்பெறும் ஊர் குழாநிலை. ஊர்த்தொகைப் பாடல் அவ்வூரை 'ஆய்ந்த தமிழ்கூறும் குழாநிலை' என்று கூறும். இவ்வூர் இன்று 'கொளாநல்லி என்று அழைக்கப்படுகிறது.

குழாய குலத்தாரின் காணி ஊர் வரிசையில் குழாநிலை சிறப்பிடம் பெறுகிறது. இளம் ஆய்வாளர் உத்தண்டிபாளையம் தூரன் நல்.நடராசன் குழாயர் நிலை - குழாநிலை ஆகியிருக்கலாம் என்று கூறியுள்ளார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய நல்ல கருத்தாகவே உள்ளது.

கோவிலூர்க் குழாயர்

குழாய குலக் காணிப்பாடலில் 'புகழ் கோயிலூர்' ஒரு காணியூராகக் குறிக்கப்படுகிறது. குளித்தலை வட்டாரத்தில் முதலில் குழாய குலத்தார் குடியேறிக் கோயிலூரில் காணி பெற்று வாழ்ந்தனர். அவ்வூர் கோவிலூர் என்றும் அழைக்கப்படும்.

கோயிலூரில் கோட்டை கட்டிப்பெரும் நிலைப் படையுடன் குழாயகுலக் குமார ரத்தினம் என்பவர் அதிகாரம் செலுத்தி வந்தார். சோழ மன்னரின் அன்பை அவர் பெற்றிருந்தார்.

வஞ்சிபுரி என்னும் பகுதியில் ஆட்சிபுரிந்த ஓதாள குலத்தினர் சோழர் ஆணையுடன் மாவலர், வேடர், வேட்டுவர் குலத்தார்மீது படையெடுத்துக் கொடுவாய்ப்

பகுதியில் போர் செய்யும்போது கோயிலூர்க் குழாயரின் உதவியை நாடினர். கோயிலூர்க் குழாய குலத்தலைவர் தம் பெரும் படையுடன் போரில் துணைநின்று போரிட்டு ஓதாளரின் வெற்றிக்கு உதவி செய்தார். அதனால் குழாய குலத்தார் புத்தரசை என்னும் பகுதியைப் பெற்றுக் கோட்டை கட்டிக் கோயில் எடுத்து நிலையாக அங்கு ஆட்சிபுரிந்தனர். இதனை ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி

'கோவிலூர்க் குழாயர் குமாரரத் தினமால்
மாவலர் வேடர் வேட்டுவர் குறும்பை
முறுக்கி ஆதிக்கம் படைக்கவே ஆண்மை
திடத்துடன் படையைச் செலுத்துவன்
என்றான்'

'புத்தனை மிதித்துக் குத்தியே குமர
ரத்தின பூபன் சத்யவா சகனாம்
நேசமாம் சோழி யீசர் புத்தரசை
வாசமாம் வேழ ராசியில் இருந்தான்'

என்று மிகவும் சிறப்பித்துக் கூறுகிறது. ஓதாள குலத்தார் பொருட்டுக் குழாய குலத்தார் போரிட்டு வெற்றி பெற்று இலவந்தி, வடுகபாளையம், கழுவேறிபாளையம், நிழலி, புத்தரசை, வேழராசியில் குடிகொண்டு காணியுரிமை பெற்றுப் புகழுடன் வாழ்ந்தனர். குழாயருடன் பொங்கலூர் பொன்னகுலத்தார், உகாயனூர்ச் சாத்தந்தை குலத்தார், செம்பை செம்பகுலத்தார் துணை நின்றனர்.

'திருவளர் பொன்னர் சிறந்த குழாயர்'
'கோமான் குழாயகுலம்'
'திருவளர் சாத்தந்தை சார்ந்திடும் செம்பர்'

'பொன்னர் குழாயர் புகழ்செய் சாத்தந்தை
நன்னர்செய் செம்பர்'

என இவர்கள் இணைத்தே கூறப்பெறுவர்.

ஓதாளர் பெரிய பெருமாளின் மூத்த மகனுக்குப் புத்தரசைக் கோட்டை குழாயரில் நல்லயன் பேரனும் அவிநாசி மகனும் ஆன குமரசாமியின் மகளைத் திருமணம் செய்தனர்.

வரலாறு, கல்வெட்டு, ஓலை ஆவணங்கள், பட்டயம், சேப்பேடு, இலக்கியம் ஆகிய ஆவணங்கள் மூலம் கோயிலூர்ப் பகுதியிலிருந்த குழாயர்கள் கொத்தனூரிலும், மேற்குப் பகுதி வேளராசியிலும் காணி பெற்று வாழ்ந்தனர் என்பது உறுதிப்படுகிறது.

புத்தரசைக் கோட்டைக் குழாயர் கொடை பல அளித்தவர்கள். அலகுமலைக் குறவஞ்சியின் இறுதியில் குறத்தி சிங்கி தான் கொங்கு வேளாளர் பெருமக்களிடம் பெற்ற பரிசிலைக் காட்டி மகிழுகின்றாள்.

'சங்கம்புகழ் அபிநயஞ்சேர் கைக்குத்
தங்கக் கங்கணம் தந்த தெவ்விடம் சிங்கி
அங்கசன் புத்தரசைக் கோட்டைக் குழாயகுல
அவினாசியப்பன் தந்த தாமிது சிங்கா'

என்பது குறவஞ்சிப் பகுதியாகும்.

வாழையடி வாழையென வந்த வரலாற்றுச் சிறப்புமிக்குள்ள குழாயர் குலத்தினர் கொற்றனூர் ஐந்து

வேளாளர்களில் முதன்மைக் காணிகொண்டு கொத்தனூரில் தனியுரிமையுடைய காணியாளராய் வீற்றிருக்கும் பெருமை கொண்டவர்கள் ஆவர்.

இனியகுலம் ஐந்து

குழாய குலத்தார் பலரும், சிறுவர், சிறுமியர் உட்பட

கொத்தனூர்க் குழாயர் கொடுமுடிச் செம்பன்
பட்டனூர்ப் பொன்னன் பரஞ்சேர்வழி
ஓதாளன்
இட்டந்தூர்ச் சாத்தந்தை இனியகுலம் ஐந்து

என்ற தொடரைப் பாடி மகிழ்வர். குழாயரோடு செம்பன், பொன்னன், ஓதாளன், சாத்தந்தை குலத் தொடர்பை இதுகாட்டுகிறது.

கொற்றனூர்க் குழாயர்

குழாய குலத்தில் பெரியண்ண கவுண்டர் என்பவர் கொற்றனூரில் புகழ் படைத்தவராக வாழ்ந்தார் என்பது இரத்தினமூர்த்தி விறலிவிடுதூது கூறுகிறது.

'வேண்டுபுகழ்க்
கோமான் குழாய குலத்தில் மிகஉதித்த
சீமான் பெரியண்ண தீட்சனன்'

என்பது அப்பாடல் பகுதியாகும்.

இவ்வாறு குழாய குலத்தினர் வீரப் பெருமையுடன் பேரரசர்க்கும், கொங்குத் தலைவர்கட்கும் அன்பராய், நண்பராய், உறுதுணையாய் விளங்கிக் கொங்கு நாட்டில் பல இடங்களில் காணியுரிமை பெற்றுப் பேரும் புகழுடன் வாழ்ந்தனர் - வாழ்ந்து வருகின்றனர் என்பது இலக்கிய வரிகளால் அறியப்பெறும் செய்தியாகும்.

வரலாற்று ஆவணங்களில் குழாயர் குலம்

கொங்கு நாட்டு வரலாற்று ஆவணங்கள் பலவற்றில் குழாய குலம் சிறப்புடன் குறிக்கப் பட்டுள்ளது.

கொங்கு காணியான பட்டயம்
நல்லூர்க் கிரையப் பட்டயம்
தென்கரை நாட்டுப் பட்டயம்
பாசூர்ச் செப்பேடு
நாரணபுரம் செப்பேடு

ஆகிய ஆவணங்களில் குழாய குலம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

கொங்கு காணியான பட்டயம்

ஈரோடு கலைமகள் கல்விநிலைய அருங் காட்சியகத்தில் இந்த ஓலைப் பட்டயம் உள்ளது.

கொங்கு வேளாளர் குலப் பெருமக்கள் சோழ நாட்டிலிருந்து குடியேறிக் கொங்கு நாட்டில் காணி ஊர் இவைகளைப் படைத்துக் கொண்டதை இப்பட்டயம் விளக்குகிறது. கரிகால் சோழன் தன் சித்தப்பிரமை நீங்கக் கொங்கு நாட்டில் செய்த பணிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கம்ப நாட்டார் குல

கோத்திரம் பிரித்த விபரம் கூறப்பட்டுள்ளது. 124 குலங்கள் எனக் கூறப்படுகிறது. திருக்கடையூர் குருக்களை வணங்கிப் பல கொடைகள் அளிக்கப்படுகின்றன. இப் பட்டயம் சோழன் பூர்வ பட்டயத்தின் சுருக்கம்போலக் காணப்படுகிறது.

பண்ணை, ஆந்தை, பெரியன், காடை, பவளன், சாத்தந்தை, மணிய குலத்தினருடன் குழாய குல பெரியபச்சாக்கவுண்டர், சின்னப்ப கவுண்டர் ஆகியோர் பெயர்கள் பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இதனால் குழாய குலத்தின் தொன்மையும், இன்றியமையாச் சிறப்பும் முதன்மையும் தெரிகிறது.

நல்லூர்க் கிரையப் பட்டயம்

கொடுமணல் தம்பிராட்டி பாளையம் பரம்பரைப் புலவர் நாச்சிமுத்துப் புலவர் வீட்டு ஓலைச்சுவடியை மூலமாக வைத்து எழுதப்பட்ட காகிதப் பிரதி கொடுமணல் வ. இராமசாமிக் கவுண்டரிடம் உள்ளது.

ஆத்தூரில் வாழ்ந்த கொங்கு வேளாளரில் பனங்காடை குலத்துச் சோழியப்ப கவுண்டர் தன் கால்நடைகட்கு மேய்ச்சல் நிலம் தேடிப் பொங்கலூர் நாட்டு நல்லூருக்கு வந்தார்.

ஏற்கனவே கொங்கச் செட்டிகளில் பவளத்தான் என்பவர் அப்பகுதியை மதுரை நாயக்கருக்காக நிருவாகம் செய்து வந்தார். அவர் மதுரை அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தத் தவறிவிட்டார்.

ஆயிரம் பொன்னாகரமும், பத்துப் பொதி நெய்யும் கொடுத்தால் நல்லூர்க் காணியாட்சியில் பாதிப் பங்கு கொடுப்பதாகச் சோழியப்ப கவுண்டரிடம் கொங்கச் செட்டிகளில் பவளத்தான் என்பவர் தெரிவித்தார். அவ்வாறே கேட்டவற்றைச் சோழியப்ப கவுண்டர் அளித்து நல்லூர் உரிமையைப் பெறுகிறார். 2786 வள்ளக்காடு பெற்ற பனங்காடைகுலச் சோழியப்ப கவுண்டர் அவ்வூர்க் கோயிலிலும் உரிமை பெறுகிறார்.

இதற்குரிய ஆவணத்தில் காடையூர், பழைய கோட்டை, காங்கேயம், கொற்றனூர்ப் பட்டக்காரர்கள் சாட்சிக் கையெழுத்திட்டுள்ளனர். (பொருளந்தை, பயிரன், கெங்கண்ணர், பெரியகுலத்தார்). அவர்களுடன் இணையாகப் பொங்கலூர் (பொன் குலுக்கி) நாட்டு வேளராசி குழாயன் கூட்டம் முத்துச் சின்னய கவுண்டர் கையெழுத்திட்டுள்ளார்.

இதன் மூலம் கொங்குப் பட்டக்காரர்கட்கு இணையாக வேளராசி குழாய குலத்தினர் மதிக்கப் பெற்றதையும் ஏற்கனவே அவர்கள் நிலையான காணி பெற்ற விபரமும் தெரிகிறது.

தென்கரை நாட்டுப் பட்டயம்

கொங்கு நாட்டில் 90 அணைகள் கட்டப் பட்டிருந்தன. வானியாற்றில் நான்கு, நொய்யலாற்றில் முப்பத்திரண்டு, உப்பாற்றில் நான்கு, மீன் கொல்லி யாற்றில் பதினெட்டு, ஆண் பொருநையாற்றில் இருபது, நன்காஞ்சியாற்றில் நான்கு, நல்லமங்கை யாற்றில் ஆறு, குடகனாற்றில் இரண்டு அணைகள் இருந்தன.

ஆண்பொருநையாற்றில் தென்கரை நாட்டில் மற்றுமோர் அணை கட்ட முடிவு செய்யப்பட்டது.

கொற்றனூர் பெரியகுல வேணாடுடையார், மூலனூர் மூலகுலத் தொண்டைமான், தாராபுரம் அதிகாரி வீரப்பராயர் முதலியோர் அணை கட்ட முயற்சி செய்தனர்.

தன் சேனைகளோடும், மக்களோடும் ஒன்று சேர்ந்து நாங்கள் அணை கட்டுகிறோம் என்று முன்வந்த பெருமக்களில் தென்கரை நாட்டுக் குழாய குலத்தாரும் வந்தனர் என்று இப்பட்டயம் கூறுகிறது.

தென்கரை நாட்டில் கொத்தனூரில் குழாய குலத்தினர் காணி பெற்றுள்ளமையால் கொத்தனூர் குழாய குலத்தாரே அவ்வாறு அணை கட்ட முன்வந்திருக்க வேண்டும். கொத்தனூரில் குழாய குலத்தினர் அதிகாரம் செலுத்தியிருக்க வேண்டும். குழாய குலத்தாரின் 'சேனை தளம்' கூறப்பட்டுள்ளமையால் இவ்வாறு கருத இடம் உண்டு.

பாசூர்ச் செப்பேடு

திருவானைக்கா வடக்கு வீதியில் உள்ள பாசூர் மடத்து அதிபர் ஞான சிவாச்சாரியார் இம்முடி அகிலாண்ட தீட்சிதர் வசம் இச் செப்பேடு உள்ளது.

பேரோடு, பாசூர் போன்ற இடங்களில் திருமடம் கண்டு கொங்கு வேளாளர் குல குருவாக விளங்கிய அகிலாண்ட தீட்சிதருக்குக் கொங்கு வேளாண் பெருமக்களில் பலர் செப்பேடு அளித்திருந்தனர். குருவுக்குச் சீடர்களாக விளங்கிய பூந்துறைநாடு,

குறுப்புநாடு, மேல்கரை அரையநாட்டு வேளாளர்கள் அவ்வாறு செப்பேடு வெட்டித் தந்தனர்.

அவர்களில் பூந்துறைநாடு கொளாநல்லியைச் சேர்ந்த குழாய குல வேளாளர்களில் பெரிய கொமாரக் கவுண்டர், சின்னப் பொங்காளிக் கவுண்டர், குப்ப கவுண்டர், முத்துரங்கக் கவுண்டர், திருமலைராயக் கவுண்டர், குப்பண கவுண்டர், வெள்ளைக் கவுண்டர் ஆகியோர் கையெழுத்திட்டவர்களில் முக்கியமானவர்கள் ஆவர்.

நாரணபுரம் செப்பேடு

வாரக்கநாட்டுப் பல்லடம் கஸ்பா நாரணபுரம் அங்காள பரமேசுவரி கோயிலுக்கு ஏற்கனவே சில கொடைகள் அளிக்கப்பட்டு வழிபாடு, விழா நடைபெற்று வந்தது.

குப்ப பூசாரி மகன் சித்த பூசாரி என்பவர் அங்காள பரமேசுவரி கோயிலுக்குப் பூசாரியாக நியமிக்கப்பட்டு மேலும் பல கொடைகள் அளிக்கப்பட்டன.

நாரணபுரம் அங்காள பரமேசுவரிக்கு நித்தியப்படி, அபிஷேகக் கட்டளை, நெய்விளக்கு, திருமாலை, திருமஞ்சனம், திருப்பணி, திருவலகு, பள்ளையம், கொண்டம் நடைபெற வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூசாரிக்கு காடு, வீடு மானியம் தந்து கட்டுக்கருது, குளகம், இடைப்பிச்சை இதுவெல்லாம் பூர்வீகப்படி நடத்த ஒப்புக் கொள்ளப்பட்டது.

குருகுல வம்ச ஆதிநாராயணக் கவுண்டரும், குடியானவர்களும், வர்த்தகர்களும், கொண்டம், திருக்கலியாணத்துக்கும் குடிக்கு வருடம் ஒரு பணமும், கலயாண மாலைக்கு ஒரு பணமும், கொண்டத்துக்கு நாலு சுமை எரிகரும்பும் பரம்பரையாக அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் முக்கியமானவர்களாகக் கையொப்பட்டவர்களில் வேளராசி குழாயகுலம் கோவிந்த கவுண்டர், இராமைய கவுண்டர் ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

குழாயகுலத் தேவமன்றாடியார்

மன்றாடியார்கள்

மன்றாடியார்கள் என்ற பட்டப் பெயருடையவர்கள் கொங்கு வேளாண் பெருமக்களின் தலைவர்களாகவும், சமூகப் பெரியவர்களாகவும் விளங்கினர். பல குலங்களுக்கு மன்றாடியார் பட்டம் பெற்ற தலைவர்கள் இருந்தனர். அவர்களுட் சிலர் பட்டக்காரர், பாளையக்காரர் என்று அழைக்கப் பட்டனர்.

பெரியகுலம் - வேணாடுடைய மன்றாடியார்
பயிரகுலம் - சர்க்கரை மன்றாடியார்
பொருளந்தைகுலம் - வாரணவாசி மன்றாடியார், காங்கேய மன்றாடியார்
செங்கண்ணகுலம் - பல்லவராய மன்றாடியார்
பவளகுலம் - வானவராய மன்றாடியார்
சாத்தந்தை குலம் - உலகுடைய மன்றாடியார், சரவண மன்றாடியார்
எண்ணை குலம் - கண்ணப்ப மன்றாடியார்
மூலகுலம் - கவறை மன்றாடியார்
பொன்னகுலம் - வானவ மன்றாடியார்

கண்ணந்தை குலம் - எழுநூற்றுவன்
மன்றாடியார்

என்பன கொங்கு வேளாண்குலப் பட்டம் பெற்ற சில மன்றாடியார் ஆவர்.

குழாயர்குல மன்றாடியார்

ஓதாளர் குலப் பெரிய பெருமாள் தனக்கு உதவிகள் பல புரிந்த தன் துணைவர்களான பொன்னர், குழாயர், சாத்தந்தை, செம்ப குலத்தாருக்குப் பட்டங்களும் பரிசில்களும் சோழன் மூலம் பெற்றுச் சிறப்படையுமாறு செய்தான். கோயிலூர்க் குழாயர் குலத் தலைவர் குமாரரத்தினம் அவர்களுக்குத் 'தேவ மன்றாடியார் என்ற சிறப்புப் பட்டத்தை அளித்தனர். இதனை ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி

'சுமானன் புத்தரசை துலங்கு குழாயர்
குமாரரத் தினவேள் கோமான் தனக்குப்
போகதே வேந்திரன் போலவே நன்றாய்
மாகன தேவ மன்றாடியார் பட்டமும்'

என்று விளக்குகிறது.

"கோயிலூர்க் குழையர் குமாரத்தினமால்
மாவலர் வேடர் வேட்டுவர் குறும்பை அடக்கி
புத்தரசை என்னும் புரியுள கோட்டையில்
முறுக்கி ஆதிக்கம் படைக்கவே ஆண்மைத்
திடத்துடன் படையைச் செலுத்துவன்" -

என்பது ஓதாளர் குறவஞ்சி.

இதில் இருந்தும் குழாயர்கள் பூர்வீகம் கோயிலுர்தான் என்றும் புலனாகிறது.

'மதுரை கொண்ட கோப்பரகேசரிபன்மர்க்கு
யாண்டு பதினஞ்சாவது கச்சிப்பேட்டு பெரிய
திருக்கற்றளி மகாதேவர்க்குச் சண்ட
பராக்கிரம மன்றாடியேன் எழுத்து'

'மங்கைமணி சாத்தந்தை
உலகில்மன் றாடிக்கு
வரிசைப்பட் டம்தரித்து'

என்பன போன்ற கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் மன்றாடி பட்டம் அளிப்பதற்குச் சான்றாக உள்ளன.

கொங்குமண்டல சதகத்தில்

தேவ மன்றாடியார் மரபில் குழாயர் குலத்தில் தேவன்முத்து என்பவர் ஒருவர் தோன்றினார். பெரும் பஞ்சம் வந்த காலத்தில் கொங்கு நாட்டில் உள்ள பல சிவாலயங்கட்கு அமுதுபடி குறையாமல் அளித்தார் என்று வாலசுந்தரக் கவிராயரின் கொங்குமண்டல சதகம் பலபடப் பாராட்டுகிறது (98).

ஊனே நிறைந்துயர் தேவா அமுதமும்
உணவொழிந்தும்
தானே நிறைந்தும் வருகுமக் காலம்
சதாசிவர்க்குத்
தேனே நிறைந்து குழாய குலேந்திர
தேவன்முத்து

வானே நிறைந்த அமுதூட்டி வாழ்கொங்கு
மண்டலமே!

என்பது கொங்குமண்டல சதகப் பாடலாகும்.

ஆகவேதான் புத்தரசன் கோட்டையில் இன்றும் குழாயகுலத்தாருக்கு உரிமையுடைய கோயிலாகச் சிவாலயம் விளங்குகிறது. வேளராசி குழாயகுலத் தாருக்கும், கொத்தனூர்க் குழாயகுலத்தாருக்கும் பூர்வீகம் கோவிலூரே. கொத்தனூர்க் கரியகாளியம்மனும், மேற்குப்பகுதி புத்தரசு நாதகவுண்டம்பாளையம் காம்பிலி அம்மனும் எண்கைகள் கொண்ட ஒத்த ஒரே தன்மை கொண்ட வடிவமாகக் காணப்படுகிறது. பழைய கோயில் அமைப்பிலும் வேறுபாடு இல்லை. குழாயகுலத்தாரின் பூர்வீகத்தை இது உணர்த்துகிறது. கொத்தனூர் சிறிது பழமையுடையதாகத் தோன்றுகிறது.

தீத்தாய் அம்மன்

வெளவால் கொத்தனூரில் குழாய குலத்தில் மூத்தவர் தேவண்ணா காணியாளரும், தம்பி கருப்பண்ணா காணியாளரும் தோன்றிச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். பரந்த ஆட்சிப் பரப்பு அவர்களுக்கு இருந்த காரணத்தால் மூத்தவர் தேவண்ணா காணியாளர் வேளராசிப் பகுதியிலும், இளையவர் கருப்பண்ணா காணியாளர் மாந்துறை-பிரமியம் பகுதியிலும் தங்கி அதிகாரம் செலுத்தி வந்தனர்.

கொத்தனூர் வனகாளியம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வணங்கி வந்தனர். நாடுகாண் மேட்டுக்குச் சேரர், சோழர், பாண்டியர் வந்தபோது அமராவதி யாற்றில் பெருவெள்ளம் வந்த காரணத்தால் பிரமியம் பகுதியில் இருந்த கருப்பண்ணா காணியாளர் மூவேந்தரின் திட்டி கழிக்க உரிய நேரத்தில் திட்டிக் கிடாய் கொண்டுவர முடியவில்லை. வேணாடர் குலத் தலைவர் தம் பிள்ளையை வெட்டிப் பலிகொடுத்துத் தலைமையும் உரிமையும் பெற்றார் என்பர்.

இதைக் கண்ட கருப்பண்ணா காணியாளரின் திருமகளாகிய அகிலாண்டநாயகி பெரிதும் வருந்தித் தவம் இருந்து நோன்பு நோற்றாள். தவ வலிமையால் பிரமியம் பகுதியிலிருந்து திருக்கொற்றைப் பலிபீடம்

நோக்கி அமராவதியை மேற்கு முகமாகப் பாயச் செய்தாள். இறையருள் பெற்ற அகிலாண்ட நாயகி தன் குலப்பெருமையைக் காப்பாற்றத் தீப்பாய்ந்து இறந்தாள். அவளுடைய கடைசித் தம்பியும் உடன் தீப்பாய்ந்து இறந்தான்.

இவர்கட்குப் பிரமியம் திருவலஞ்சுழிநாதர் கோயிலுக்கு மேற்கே நாகம்பாளையம் அருகில் உள்ள அய்யம்பாளையத்தில் தீத்தாய் அம்மன் என்ற பெயரில் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. மங்கலப் பெண்ணாகவே அகிலாண்ட நாயகி தீப்பாய்ந்து இறந்தாள். இன்றும் புற்றுவடிவில் அங்கு எழுந்தருளியுள்ளாள்.

தனக்குப் பூவும் பாலும் வேண்டாம் என்றும், பூப்படையாத பெண்கள் மட்டுமே தன்னருகே வரவேண்டும் என்றும் அருள்பாலித்தாள். இன்றும் அக்கோயில் தீத்தாயி அம்மன் என்று வணக்கத்திற்குரியதாக உள்ளது.

கொங்கு நாட்டில் இதுபோல வேளாண் குலச் செல்விகள் ஏதேனும் விரதம் முடிக்க இவ்வாறு தீப்பாய்ந்து இறப்பது உண்டு. அக்கோயில்களை

தீப்பாய்ஞ்ச அம்மன்
வீரமாத்தி
படைக்கலக்காரி
புடவைக்காரி
மூடியாகோயில் தெய்வம்
கன்னியாத்தாள்

என்று அழைக்கப்படுவது உண்டு. வழிபடு காலம் தவிர இக்கோயில் பெரும்பாலும் மூடியே இருக்கும். அதனால் இதை மூடியா கோயில் என்பர்.

இவ்வாறு தீப்பாய்வோர்

'தன்னுலகில் விரிகின்ற காவேரி சறையுநதி
பிரயாகை துங்கபத்ரை
சொல்கிருஷ்ணா நர்மதா கங்கைநதி
யமுனையும் தூயகோ தாவிரிநதி
இன்னதிகள் தன்னிலே மூழ்குவதை ஒக்குமே'

என்று புண்ணிய நதிகளில் நீராடுவோர் போன்று தீப்பாய்ந்தனர் என்று கன்னிவாடி கண்ணகுலப் பட்டயம் கூறுகிறது. பல கொங்கு நாட்டு ஆவணங்களில் தீப்பாய்தல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

அய்யம்பாளையம் குழாயகுலத் தீத்தாயி அம்மன் கோயிலுக்குக் குழாய குலக் கவுண்டர்களே பூசாரிக் கவுண்டர்களாக உள்ளனர். 1992 வரை மூடியே இருந்த இக்கோயில் தை முதல் நாள், ஆடி 18, தீபாவளி ஆகிய மூன்று நாட்கள் மட்டும் திறக்கப்படுகின்றன. இக்கோயில் திறந்து வழிபட்டால் குழாய குலம் செழிக்கும் என்பது நம்பிக்கை. தீத்தாயி அம்மன் குழாயகுலச் செல்வியான அகிலாண்ட நாயகி நினைவுக் கோயிலாகும்.

(இந்த வரலாற்றைக் கூறியவர் அய்யம்பாளையம் பி. நல்ல சுப்பிரமணியம் என்றும் குழாயகுல அன்பர் ஆவார்.)

குல குருக்கள்

கொங்கு நாட்டில் சைவம் சிறப்புற்று விளங்கியது. கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் ஏழு. அவை கரூர், வெஞ்சமாங் கூடல் அவிநாசி, பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, திருமுருகன் பூண்டி என்பன. அவ்வேழு தலங்களையும் ஒன்றாகச் சேர்த்து வணங்கும் வழக்கம் கொங்கு நாட்டில் இருந்தது. அதனை,

ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறசை
நீதி அவிநாசி நீள்நணா - மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன்
பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை

என்ற வெண்பா சிறப்புடன் விளக்குகிறது. காங்கேய நாட்டுப் பட்டக்காரர்கள் ஒரே நாளில் இவ்வேழு தலங்களையும் வணங்கும் வழக்கம் கொண்டிருந்தனர் என்பதைத் தனிப்பாடல்கள் சில விளக்குகின்றன.

இவ்வாறு சைவம் சிறந்த கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வேளாண்குலப் பெருமக்கள் பலரும் தங்களுக்கென்று தனித்தனியாகக் குல குருக்களை நியமித்துக் கொண்டு பலர் திட்சை பெற்றுச் சைவசமயச் சிறப்புடன் நலமாக எல்லாப் பேறும்

பெற்று வாழ்ந்தனர். குலகுருக்கள் சைவம் பேணி, ஆலயங்களைக் காத்து, அடியார்க்கு ஆசி வழங்கிச் சிறப்புடன் திகழ்ந்தனர்.

கொங்கு நாட்டில் முதலில் குடியேறிய கொங்கு வேளாண் பெருமக்கள் தங்கள் குலகுருவுடன் வந்தனர் என்பதைப் பல செப்பேடுகள் கூறுகின்றன. 24 நாடுகள் பிரித்ததும் நாட்டுக்கு ஒரு குலகுருவாக 24 பேரை நியமித்தனர் என்று ஒரு பட்டயம் கூறுகிறது. சில ஊர்களுக்கும், குலங்களுக்கும், தனித்தனியாகக் குருக்கள் இருந்தனர்.

சோழர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தும் போது சோழநாட்டிலிருந்து சிறந்துள்ள ஆதி சைவர்களைக் கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்ததாகக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

குலசே கரன்குலோத் துங்கசீர்ச் சோழர்கள்
கொங்கினிடை
தலபூசை நன்குறத் தன்நாட்டு ளாரில்
சமர்த்தர்கண்டு
நிலையான காணியும் மேன்மையும் ஈய
நிதானமுறு
வலவாதி சைவர்கள் வாழ்வதன் றோகொங்கு
மண்டலமே

என்ற கொங்கு மண்டல சதகப்பாடல் மூலம் அதனை அறியலாம். ஒரு சில செப்பேடுகள் சோழநாட்டுத் திருக்கடையூரிலிருந்து அவர்கள் வந்ததாகக் கூறுகின்றன.

சில குருக்கள் காஞ்சிபுரம் தம் பூர்வீகக் காணியூர் என்று கூறுகின்றனர். சிதம்பரமும் அவர்கள் காணியூரில் ஒன்றாகும்.

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையும் இதனை ஒரு பாடல் மூலம் விளக்குகிறது.

'காரணிக மானவள வன்கலி யுகாதியில்
கட்செவி மலைப்பரமனைக்
கந்தனை வணங்கிமக பூசையுண் டாக்கினன்
கைலாச நாதசிவனைத்
தாரணி புகழ்ந்திடத் தாபித்த னன்பெரிய
தண்கூப மதுகண்டனன்
சைவமறை யோர்பூச னைக்கினிய ராகவே
தனதுமண் டலமேவியே
சீரணிசீ காழியா லம்பாயர் காசிபர்
திறத்தோடர்ச் சனைசெய்யவே
திதமுற அமைத்தனன் மநுநீதி முறைகண்ட
செம்பியன் பெற்ற பெருமை'

என்ற பாடல் மூலம் அதனை அறியலாம்.

கொங்கு வேளாளர்கட்குக் குலகுருக்கள் இருந்தனர் என்பதைப் பல செப்பேடு பட்டயங்கள் உறுதிப் படுத்துகின்றன.

"கந்தாபுரிப் பட்டணம் அதிலுள்ள பதினெண் குடிகள் இந்தத் திருமுருகன் பூண்டி ஆதினத்துக்கு உடையவராகிய காசிப கோத்திரத்துக் குருக்களான படியினாலே தன்னுடைய சிஷியனாகிய வீரவிக்கிரம சோழியாண்டாக்கவுண்டர்

என்பது ஒரு எடுத்துக்காட்டாகும்.

கொங்கு வேளாளர்கள் தங்கள் குலகுருக்களை எவ்வாறு மதித்தனர் என்பதைக் கொங்கு நாட்டுச் செப்பேடு ஒன்று பின்வருமாறு விளக்குகிறது.

"நாங்கள் யெந்த நாட்டிலே யெந்த ஊரிலேயிருந்தாலும் எங்கள் கோத்திரத்தார் குலகுருக்களுக்கு தலைக்கட்டு ஒன்றுக்கு நாகரம் பணம் அஞ்சு வருஷம் பிரதி குடுத்துச் சஞ்சாரம் வந்தபோது சஞ்சாரக் காணிக்கையும் அப்பணைப் படிக்கி உபதேசம் பாத பூசை முதலானதும் பண்ணிக் கொண்டு எங்கள் வமுசத்தார் புத்திரபவுத்திர பாரம்பரியமாகி பாதபூசை பண்ணிக் கொண்டு சுவாமியார் தெண்டிணை கண்டிணை ஆணை ஆக்கிணை அபராதத்துக்குட்பட்டு நடந்து கொள்ளுவோமாகவும்.

எங்கள் கோத்திரத்தார் எந்த நாட்டிலே எந்த ஊரிலே காணி வாங்கி அதிகாரம் பண்ணினாலும் குடித்தனம் செய்தாலும் சுவாமியார் பாதத்துக்குப் பணிந்து நடந்து கொள்ளுவோமாகவும். இப்படி நடந்துவரும் காலத்தில் இதுக்கு விகாதம் சொல்லாமல் பரிபாலனமாயி எங்கள் வம்சத்தார் பயபக்தியாய் நடந்து வந்தவன் சுகமாயி தனசம்பத்தும் தானிய சம்பத்தும் அஷ்டைஸ்வரியமும் மேன்மேலும் உண்டாகி கல்லும் காவேரிப் புல்லும் பூமியும் சந்திராதித்தாள் உள்ளவரைக்கும் சுகமாயிருப்பார்கள்."

உடல் பொருள் ஆவி மூன்றையும் குலகுருவுக்கே தத்தம் செய்து பட்டயம் எழுதித் தந்துள்ளனர். வாரிசு இல்லாத சொத்து குலகுருவுக்கே என்றும் சிலர் கூறினர். குருவே சிவம் என்று திருமூலர் முதலிய சான்றோர்கள்

கூறிய சிறந்த வழியில் கொங்கு வேளாண் பெருமக்கள் நடந்துள்ளனர்.

குருக்கள்புரம், குருக்கள்பாளையம், தம்பிரான் வலசு போன்ற ஊர்கள் குருக்களுக்குத் தனி ஊர்ப் பகுதிகளைக் கொடையாக விட்டு அவர்களுக்கென்றே தனி ஊர்கள் ஏற்பட்டதைக் குறிக்கும்.

கொத்தனூர்க் குழாய குலப்பெருமக்களுக்குத் திருக்கொற்றைத் திரு ஆதினம் சடைய பரமேசுர பண்டித குருக்கள் பரம்பரையில் அவர்கள் வழிவந்த திருமிகு. தட்சிணாமூர்த்தி சடைய பரமேசுவர பண்டித குருசுவாமிகள் அவர்கள் குலகுருவாக விளங்குகிறார்கள். முன்னவர் புகழையெல்லாம் தம் புகழ் ஆக்கிக்கொண்டு வாழும் அவர்கள் இன்று குறிச்சி என்னும் இலக்குமநாயக்கன் பட்டியில் திருமடம் அமைத்து எழுந்தருளியுள்ளார்கள். ஆதிசைவரில் அவர்கள் காசிப கோத்ரம்சார்ந்தவர்களாவர்.

தென்கரை நாட்டில் நான்கு குல குருக்களில் முதல்வராக விளங்கும் அவர்கள் இலக்கியங்களைக் காத்துப் போற்றி வைத்திருப்பதோடு இலக்கியங் களாலும், கொங்குநாட்டுப் புலவர் பெருமக்களாலும் பாடப்பெறும் சிறப்பினை உடையவர்கள்.

அவிநாசி இளையான் கவிராயர் பாடிய கொற்றைநகர் மறவபாளையம் அப்பிரமேயர் தலபுராணம் அச்சிடப் பழைய பிரதியைக் கொடுத்து உதவியவர்கள் அவர்களே ஆவர்.

கொங்கு வேளாளர்தம் பெருமைகளை உள்ளடக்கியதாக வீராட்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர் வேளாளபுராணம் பாடினார். வேளாள புராணத்தை அரங்கேற்றம் செய்தவர்கள் குறிச்சி இலக்குமநாயக்கன்பட்டி ஆந்தை குலப் பெரு மக்களேயாவர்.

அந்நூல் அரங்கேற்றத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தவர் குறிச்சி-இலக்கும நாயக்கன் பட்டி சடைய பரமேசுவர பண்டித குருசுவாமிகள் ஆவர். அந்நூலின் இறுதிப் பகுதியில் சடையபரமேசுவர பண்டிதருக்கு மங்களம் பாடப்படுகிறது.

நூலாசிரியர் கந்தசாமிக் கவிராயர் வேளாள
புராணத்தை
மிசுரமா நாதோது மேன்மைபெறு சடையபர
மேசுரபண் டிதகுருவின் விளங்குமலர்
அடிகளை

வணங்கிப் பாடுவதாகக் கூறுகிறார். மடவளாகம் இலட்சுமணபாரதி போன்ற கொங்கு நாட்டுப்புலவர்கள் பலர் சடையபரமேசுவர பண்டிதர் பற்றிப் பாடல்கள் பல பாடியுள்ளனர்.

கொத்தனூர்க் குழாய குலத்தாருக்குக் குலகுருவாக விளங்கும் சடையபரமேசுவர பண்டிதர் குடும்பம் முன்பு கொத்தனூரில்தான் வாழ்ந்துள்ளனர். ஐயர் தோட்டம் என்ற பகுதி அவர்களுக்கு உரிமையுடையதாக இருந்தது. அவர்கள் வாழ்ந்த பண்டைய பகுதிகள் இன்னும் கொத்தனூரில் உள்ளன.

கொத்தனூர் குழாய குலத்தாரின் சமய, கோயில் திருப்பணி, வழிபாடு, விழா ஆகியவற்றிற்குச் கொற்றையாதீனம் சடையபரமேசுர பண்டித குருசுவாமிகள் வழியினரே ஆலோசனைகூறி முன்னின்று நடத்தி வருகிறார்கள்.

மேலும் அவர்கள் பெயரில் உள்ள 'திருக்கொற்றைத் திருவூர் ஆதீனம்' என்ற அடைமொழியிலிருந்தே தென்கரை நாட்டிற்கும் கொற்றையம்பதியின் காணியாளர் குழாய குலத்தார்களுக்கும் குலகுருவாக உள்ளவர்கள் சடைய பரமேஸ்வர பண்டித குருக்கள் என்பது விளங்குகிறது. மேலும் கொற்றை ஆதினத்தார் குல குருவாக இருப்பதனால் பழம்பெறும் காணியான கொற்றையம்பதி பழம்பெருமை வாய்ந்தது என்றும் கொற்றையம்பதிக் காணியாளர்கள் குழாய குலத்தார்கள். பழம்பெருமை வாய்ந்தவர்கள் என்றும் தெளிவாக உணர முடிகிறது. மேலும் கொற்றை ஆதீனக் குலகுருதான் இன்னும் மற்ற நான்கு குலத்தார்களுக்கும் சங்கரண்டாம் பாளையம் பெரிய குலத்துப் பட்டக்காரரர் வேணாடுடையார்களுக்கும் குல குருவாக இருந்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புகழ்பாடிய புலவர்கள்

கொங்கு நாட்டில் புலவர்கட்குப் பெருமை மிக்க சிறந்த மரியாதை இருந்தது. கொங்கு வேளாளர் வாழ்க்கையோடு புலவர்கள் வாழ்க்கை இரண்டறக் கலந்து பின்னிப் பிணைந்திருந்தது. பல நாடுகளில் தனிப்பட்ட பெருமக்கள் புலவர்களை ஆதரித்த வரலாறு உண்டு. ஆனால் ஒரு சமுதாயம் முழுவதும் புலவர்களைப் பொன்னே போல் போற்றி, உபசரித்துப் பெருமைப் படுத்திய வரலாறு கொங்கு நாட்டைத் தவிர வேறு எங்கும் காண இயலாததொன்றாகும்.

கொங்கு நாட்டின் ஒவ்வொரு ஊரிலும் பரம்பரைப் புலவர்கள் இருந்தார்கள். புலவர்கள் கொங்கு வேளாளர்கள் வீட்டுக்கு வந்து அவர்கள் குலப்பெருமை கூறும் நாட்டுப் பாடலையும், காணிப்பாடலையும் பாடுவர். வாசல் வளம் பாடுவர். வேளாளர் அளிக்கும் பரிசிலைப் பெற்றுப் புலவர் மகிழ்வர். கொங்கு வேளாளர்கள் தங்கள் களங்களிலேயே கொங்கு முறத்தால் தானியங்களை அளந்து புலவர்கட்கு அளிப்பர்.

திருமணச் சடங்குகள் முதலியன கொங்கு வேளாளர் இல்லங்களில் நடக்கும்போது புலவர்களையும்,

புலமைமிக்க கலைஞர்களையும் முன்னிலைப் படுத்தியே நடைபெற்றன.

'பட்டன் புலவன் பண்பாடி தக்கையன்
திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன் னேவர'

சீர்கள் கொங்கு வேளாளர் இல்லங்களில் நடைபெற்றுள்ளன. இத்தொடர் மங்கல வாழ்த்தில் காணப்படுகிறது.

திருமணத்தில் புலவர்கள் மங்கல வாழ்த்து உரைத்து கம்பர் வாழியைப் பாடுவர். கொங்கு வேளாளர் திருமண வீடுகளில் ஏரெழுபது, திருக்கை வழக்கம் போன்று வேளாளர் பெருமை கூறக் கம்பர் பாடிய இலக்கியங்கள் படிக்கப்பட்டன. கொங்கு வேளாளர் திருமண வீடுகள் முன்பு இலக்கிய மேடையாகத் திகழ்ந்துள்ளன. இதைப் பல பட்டயங்கள் கூறுகின்றன.

திருமணத்தின் இறுதியில் திருமண வீட்டில் புலவர்கள் பால் சாப்பிடுவர். "பால்சாப்பிடும் பழனிமலைப் புலவன்" என்றே உரிமைப் புலவர்களை அழைத்தனர். கொங்குப் புலவர் பட்டயத்தில் இத்தொடர் வருகிறது.

வாரக்க நாட்டிலிருந்து பழனிசாமிப் புலவர் என்பாரின் முன்னோர் கொத்தனூர் அருகில் உள்ள முதலிபாளையத்தில் குடியேறினர். அவர்கள் வழியினரே கொத்தனூர்க் குழாய குலக்காணிப்புலவராக விளங்கினர். கொத்தனூர் கோயில் விழாக்களிலும், குழாய குலத்தாரின் சமூக நிகழ்ச்சிகளிலும், குழாயகுலக்

குடும்பத்தில் நடைபெறும் திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிகளிலும், முதலிபாளையம் பழனிசாமிப்புலவர் வகையினரே முன்பு தவறாமல் கலந்து கொண்டனர். கொங்குப் புலவர்கட்குக் கொங்கு வேளாளர் செய்யும் எல்லாச் சிறப்புக்களையும் முதலிபாளையம் புலவர் குடும்பத்தினர் கொத்தனூர்க் குழாய குலத்தார் மூலம் பெற்றனர்.

முதலிபாளையம் புலவர் பரம்பரையினர் சேரவேளாளர் மரபைச் சேர்ந்தவர்கள். சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் அம்மரபில் தோன்றி முதலிபாளையத்தில் பெரும்புகழுடன் வாழ்ந்தவர் ப. நாச்சிமுத்துப் புலவர் என்பவர் ஆவார். மகாவித்துவான், ஆசுகவி, புலவோர் சிங்கம், மதுரகவிவலவன், காளமேகம் எனப் பலவாறு அவர் புகழப்பட்டார். இவரை நாச்சப்பன் என்றும் மக்கள் அழைப்பர். வடமொழியிலும், தமிழிலும் பெரும்புலமை படைத்த அவர் வீராட்சி மங்கலம் கந்தசாமிக் கவிராயர் பாடிய வேளாள புராணத்தைச் சுருக்கி 'மரபாளர் உற்பத்திக் கும்மி' என்ற பெயரில் பாடி 1921இல் அதனை அச்சிட்டார். 1906இல் ஐம்பெரும்காப்பியங்களில் ஒன்றான 'வளையாபதி' என்று நூலில் சுருக்கத்தை ஈரோடு நித்திய கல்யாணசுந்தரம் அச்சகத்தில் அச்சிட்டார்.

'பாசிழை பொன்னார் முதலிபாளையம் வாழ் நாச்சிமுத்துப்பாவலன்' என்று பாராட்டப்பட்ட இவர் கொத்தனூர்க் காணியாளர்களாம் குழாய குலத்தாரால்

நன்கு ஆதரித்துப் பெருமைப்படுத்தப்பட்டவர் ஆவார். இவர்கள் மரபினர் இன்று யாரும் இல்லை. பரம்பரைப் புலவர் வழக்கம் இன்று மறைந்தது. புலவர் மரபினர் வேறு தொழிலை நாடிச் சென்றுவிட்டனர்.

கொத்தனூர்க் காணியாளர்கள் குழாய குலத்தார்களுக்குக் கொத்தனூருக்கு அருகில் உள்ள முத்துப்புலவன் வலசில் உரிமையுடைய புலவர்கள் குடியிருந்ததாகவும் தெரிகிறது. குழாய குலத்தார் தம் தலைநகர் கொற்றையம்பதியில் குலகுருக்கள், புலவர்கள் ஆகியோருடன் சமயமும் மொழியும் பேணிக்காத்து தனித்தன்மையுடன் நிலைபெற்ற புகழுடன் திகழ்ந்தனர் என்பது வரலாறு. வாழ்க குழாய குலத்தார்! வளர்க அவர் தம்தெய்வீகப்பணி! குழாய குலத்தார் தம் உற்றார் உறவினருடன் என்றும் நிலையான செல்வங்களுடன் வாழ்வாங்கு வாழ அன்னை ஆதிபராசக்தி ஸ்ரீகொத்தனூர் அம்மன் தாள்பணிந்து வணங்குவோம். மங்களம்.

சுபம்

அருள்மிகு ஸ்ரீகொத்தனூர் அம்மன் திருப்பணி & கும்பாபிஷேக அமைப்புக் குழுவினர்

பெருந்தலைவர் திரு. ச. குமரவேல் கவுண்டர்,
மேல்கரைப்பட்டி.

தலைவர் திரு. ஆர். பாலாமணி, சிவகுமார் & கோ,
தாராபுரம்.

செயலாளர் திரு. வி. பழனிசாமி,
ஆனந்தா குரூப்ஸ், தாராபுரம்.

பொருளாளர் திரு. என். இராமசாமி,
ராஜா எக்ஸ்புளோவ்ஸீஸ், தாராபுரம்.

உறுப்பினர்கள்

திரு. T.P. பழனிச்சாமிக்கவுண்டர் - திருப்பூர்
உதவித்தலைவர் (வடக்கு) - திருப்பணிக்கமிட்டி.

திரு. N. வெள்ளைச்சாமிக்கவுண்டர் - தும்பலப்பட்டி
உதவித்தலைவர் (தெற்கு) - திருப்பணிக்கமிட்டி

திரு. V. சுப்பிரமணியன், ஆசிரியர் - பெரிச்சிபாளையம்
இணைச்செயலர் (தெற்கு) - திருப்பணிக்கமிட்டி

திரு. M. பன்னீர்செல்வம் - வெள்ளகோவில்
உதவிச்செயலர் (வடக்கு) - திருப்பணிக்கமிட்டி

திரு. R. வேலுச்சாமிக்கவுண்டர் - வெட்டிக்காரன்வலசு
உதவித்தலைவர் (கிழக்கு) - திருப்பணிக்கமிட்டி

திரு. K. மாரிமுத்துக்கவுண்டர் - பூசாரிக்கவுண்டன்வலசு
உதவிச்செயலர் (கிழக்கு) - வசூல்கமிட்டி

திரு. P. இராமசாமி VAO - நாதம்பாளையம்
உதவிச்செயலர் (வடக்கு) - வசூல்கமிட்டி

திரு.பெரியவீடு P. பெரியசாமிக்கவுண்டர் - வெள்.கொத்தனூர்
உதவித்தலைவர் (கோவில்பகுதி) - திருப்பணிக்கமிட்டி

திரு.அப்பாச்சிக்கவுண்டர் - வெள.கொத்தனூர்
உதவித்தலைவர் (கோவில்பகுதி) - கும்பாபிஷேகக் கமிட்டி

திரு. R. குப்புசாமிக்கவுண்டர் - ராக்கியாவலசு
உதவிச்செயலர் (கோவில்பகுதி) - திருப்பணிக்கமிட்டி

திரு. A. பழனிச்சாமிக்கவுண்டர் - தொண்டாமுத்தூர்
உதவித்தலைவர் (மேற்கு) - திருப்பணிக்கமிட்டி

திரு. N. கருப்புச்சாமிக்கவுண்டர் - தொண்டாமுத்தூர்
உதவித்தலைவர் (மேற்கு) - கும்பாபிஷேகக் கமிட்டி

திரு. M. நடராஜ்கவுண்டர் - நரசிங்காபுரம் (கேரளா)
இணைச் செயலர் (மேற்கு) - திருப்பணிக்கமிட்டி

திரு. G.K. சரஸ்வதி அம்மாள் & சன்ஸ் - கோவை
உதவித்தலைவர் - வேள்விக்குழு

திரு. S. விவேகானந்தன் - பெரியபோது
உதவிச்செயலர் (மேற்கு) - கும்பாபிஷேகக்கமிட்டி

திரு. R. துரைசாமிக்கவுண்டர் குப்பாண்டக்கவுண்டன்புதூர்
உதவிச்செயலர் (மேற்கு) - வசூல்கமிட்டி

திரு. R. கனகராஜ் - பொள்ளாச்சி
உதவிச்செயலர் (மேற்கு) - ஸ்ரீகன்னிமார் திருப்பணி

திரு. நா. அருணாசலம் - மந்திரிபாளையம்
இணைச்செயலர் - மலர்வெளியீடு

திரு. S. சிவசுப்பிரமணியக்கவுண்டர் - பிலிசின்னாம்பாளையம்
உதவிச்செயலர் (மேற்கு) - வசூல்கமிட்டி

திரு. M. செல்வராஜ் - கோபாலபுரம் (கேரளா)
உதவிச்செயலர் (மேற்கு) - திருப்பணிக்கமிட்டி

மற்றும் திருப்பணிக்குழு உறுப்பினர்கள்.

திருப்பணிக்குழு உறுப்பினர்கள்

1. திரு. சின்னசுவாமிகள், தமிழ்நாடு இரும்பு வணிகம், பழனி
2. திரு. சின்னச்சாமிக்கவுண்டர், தொட்டம்பாளையம்
3. திரு. சாந்தலிங்கக்கவுண்டர், பெரியபோது
4. திரு. முருகுசாமிக்கவுண்டர், பெரியபோது
5. திரு. தங்கமுத்துக்கவுண்டர், தொண்டாமுத்தூர்
6. திரு. வெங்கடாசலக்கவுண்டர், தொண்டாமுத்தூர்
7. திரு. ஜகதீசக்கவுண்டர், நாதம்பாளையம்
8. திரு. சென்னிமலைக்கவுண்டர், அம்மேகவுண்டனூர்
9. திரு. இராமானந்தமூர்த்தி, இரங்கேகவுண்டன்புதூர்
10. திரு. நடராஜ் கவுண்டர், இரங்கேகவுண்டன்புதூர்
11. திரு. பெரியசாமிக்கவுண்டர், சின்னவேலம்பட்டி
12. திரு. முருகுசாமிக்கவுண்டர், பூசாரிக்கவுண்டன்வலசு
13. திரு. பழனிசாமிக்கவுண்டர், வெளவால்கொத்தனூர்
14. திரு. நாச்சிமுத்துக்கவுண்டர், மேட்டுப்பட்டி
15. திரு. சுப்பையகவுண்டர், மேட்டுப்பட்டி
16. திரு. நாச்சிமுத்துக்கவுண்டர், ராக்கியாவலசு
17. திரு. கே. முத்துசாமிக்கவுண்டர், தாளையூத்து
18. திரு. முத்துச்சாமிக்கவுண்டர், லிங்கமநாயக்கன்பட்டி
19. திரு. பி.கே. பரமசிவக்கவுண்டர், பிலிசின்னாம்பாளையம்
20. திரு. ம. செல்வராசு, எம்.எஸ்.சி., எம்.பில்., பூசாரிக்கவுண்டன்வலசு
21. திரு. எ. காளியப்பகவுண்டர், பூசாரிக்கவுண்டன்வலசு
22. திரு. சி. சுப்பிரமணியம், பழனி
23. திரு. கே. பழனிசாமி, திண்டுக்கல்
24. திரு. ஆர். கனகராஜ், பொள்ளாச்சி
25. திரு. எஸ். குமாரவேல், பழனி
26. திரு. அப்பாச்சிக்கவுண்டர், வெளவால் கொத்தனூர்
27. திரு. மோகன்தாஸ், பரவிபாளையம்
28. திரு. வேலுசாமிக்கவுண்டர், மூலனூர்
29. திரு. கே. கோபாலகிருஷ்ணன், திருப்பூர்
30. திரு. ஆர். பழனிசாமி, ஆவரம்பாளையம்
31. திரு. நாராயணசாமிக்கவுண்டர், பாலத்துறை
32. திரு. இரத்தினத்தாக்கவுண்டர், கவுண்டப்பகவுண்டன்வலசு
33. திரு. காளிமுத்துக்கவுண்டர், கவுண்டப்பகவுண்டன்வலசு
34. திரு. ஆர். நடராஜ், கவுண்டப்பகவுண்டன்வலசு
35. திரு. சுப்பிரமணியக்கவுண்டர், பாலப்பம்பட்டி
36. திரு. கு. காளிப்ப கவுண்டர், கட்டிடம்- கல்துறை

37. திரு. உ. இராமசாமிக்கவுண்டர், பெரிச்சிபாளையம்
38. திரு. சின்னத்தம்பிக்கவுண்டர், பெரிச்சிபாளையம்
39. திரு. ஆர்.பி. சுப்பிரமணியம், ராவணாபுரம்
40. திரு. கே. சிவக்குமார், கோலார்பட்டி
41. திரு. டி. இரத்தினசாமி, வடபருத்தியூர்
42. திரு. மணி (எ) செல்வக்குமாரசாமி, கோலார்பட்டி
43. திரு. கே. கோதண்டபாணி, கோலார்பட்டி
44. திரு. பி.கே. கிருஷ்ணசாமிக்கவுண்டர், பிலிசின்னாம்பாளையம்
45. திரு. ஆர். நடராஜ், அனுப்பூர்களம்
46. திரு. எம். மயில்சாமி, கும்மாண்டம்பாறை
47. திரு. கே.எம். சுப்பையன், கும்மாண்டம்பாறை
48. திரு. என். சீனுத்துரைக்கவுண்டர், பெரியபோது
49. திரு. ஏ. வெள்ளியங்கிரிக்கவுண்டர், பெரியபோது
50. திரு. அய்யாவு பழனிசாமி, மேல்கரைப்பட்டி
51. திரு. ஆர். பெரியசாமிக்கவுண்டர், தேவதாகுடிவலசு
52. திரு. என். பழனிசாமிக்கவுண்டர், தேவதாகுடிவலசு
53. திரு. ராஜாராம், சமத்தூர்
54. திரு. குமாரசாமிக்கவுண்டர், அக்கரைப்பட்டி
55. திரு. ஆறுமுகக்கவுண்டர், தாளைபூத்து
56. திரு. நா. குமாரசாமி, கஞ்சிக்காளிவலசு
57. திரு. புதுவீடு குப்புசாமிக்கவுண்டர், கஞ்சிக்காளிவலசு
58. திரு. ஆர். கருப்புசாமிக்கவுண்டர், வெடிக்காளிவலசு
59. திரு. எஸ். ஆறுச்சாமிக்கவுண்டர், வெடிக்காளிவலசு
60. திரு. கிட்டுச்சாமி, குமாரசாமிக்கவுண்டன்வலசு
61. திரு. எம். பழனிசாமி, இலங்கமநாயக்கன்புதூர்
62. திரு. பழனிசாமிக்கவுண்டர், சங்கரண்டாம்பாளையம்
63. திரு. வெள்ளைச்சாமிக்கவுண்டர், ஐயம்பாளையம்
64. திரு. நாச்சிமுத்து, மடத்துப்பாளையம்
65. திரு. சுப்பிரமணியம், மடத்துப்பாளையம்
66. திரு. முத்துசாமிக்கவுண்டர், புங்கந்துறை
67. திரு. பெரியசாமிக்கவுண்டர், தென்னங்கரைப்பாளையம்
68. திரு. பழனிசாமிக்கவுண்டர், மடத்துக்குளம்
69. திரு. கே. பொன்னுசாமி, சூலூர்
70. திரு. கே.வி.பழனிசாமிக்கவுண்டர், கம்பளியாம்பட்டி
71. திரு. கே. தண்டபாணி, கம்பளியம்பட்டி
72. திரு. வி. ஆறுமுகக்கவுண்டர், தீர்த்தம்பாளையம்
73. திரு. அப்பன்(எ) கவுண்டப்பகவுண்டர், கொத்தயம்

74. திரு. கே. கருப்புசாமி, கொத்தயம்
75. திரு. செல்லமுத்துசாமிக்கவுண்டர், வல்லகொண்டாபுரம்
76. திரு. மு. கண்மணி, கூத்தம்பூண்டிபான்வலசு
77. திரு. கே. கோவிந்தசாமிக்கவுண்டர், பெரும்பாறைச்சல்லை
78. திரு. சி. இராஜகோபால், பெரும்பாறைச்சல்லை
79. திரு. நடராஜ், மேட்டுப்பாளையம்
80. திரு. கே. இராமமூர்த்தி, வத்திவாடி
81. திரு. கே. கிருஷ்ணமூர்த்தி, பொள்ளாச்சி
82. திரு. பி.கே. பொன்னுசாமிக்கவுண்டர், அங்கலக்குறிச்சி
83. திரு. கே.பி. இரத்தினசாமி, கருமாபுரம்
84. திரு. தங்கவேல்கவுண்டர், பக்கோதிபாளையம்.
85. திரு. எம். சண்முகம், திருப்பூர்
86. திரு. பிபி. இராமசாமி, தென்னமநல்லூர்
87. திரு. கே. இராமசாமி பிஏ., கோட்டூர்மலையாண்டிபட்டணம்
88. திரு. கே. துரைசாமி, கோவை
89. திரு. எம். வெள்ளியங்கிரிக்கவுண்டர், வண்ணாரமடை
90. திரு. எம். கோபால்சாமி, பொள்ளாச்சி
91. திரு. கலைச்செல்வ குமாரசாமி, பொள்ளாச்சி
92. திரு. கே. சின்னசாமிக்கவுண்டர், எரகாம்பட்டி
93. திரு. எம். சின்னசாமி, கோபாலபுரம்
94. திரு. செல்வரத்தினம், கோபாலபுரம்
95. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, கோபாலபுரம்
96. திரு. நா. பழனிசாமி, கஞ்சிக்காளிவலசு
97. திரு. ஏ. காளியப்பகவுண்டர், பூசாரிக்கவுண்டன்வலசு
98. திரு. மு. சுந்தரசாமிக்கவுண்டர், இலங்கமநாயக்கன்புதூர்
99. திரு. ஆர். கந்தசாமிக்கவுண்டர், பிலிசின்னாம்பாளையம்
100. திரு. இரத்தினமூர்த்திக்கவுண்டர், செடிமுத்தூர்களம்
101. திரு. அப்பாச்சிக்கவுண்டர், செல்லாக்கவுண்டன்புதூர்
102. திரு. டி. தண்டபாணி, வெள்ளகோயில்
103. திரு. அப்பாக்குட்டி, பெரிச்சிபாளையம்
104. திரு. பழனிசாமிக்கவுண்டர், தேவதாகுடிவலசு
105. திரு. பழனிசாமி, தும்பிச்சிபாளையம்
106. திரு. பி. சின்னசாமி
107. திரு., எம். தெய்வசகாயம், பி.இ., - நாதம்பாளையம் (ஈரோடு)
108. திரு. என். தங்கமுத்து சகுனிபாளையம்
109. திரு. ஆர். அர்ச்சுனன் தாராபுரம்
110. திரு. ஆர். ராஜாமணி கள்ளிவலசு

111. திரு. என். துரைசாமி சகுனிபாளையம்
112. திரு. ஜி. பொன்னுசாமி வெளவால் கொத்தனூர்
113. திரு. பி. தங்கராசு வெளவால் கொத்தனூர்
114. திரு. பி. சின்னசாமி வெளவால் கொத்தனூர்
115. திரு. ஆர். இரங்கசாமி ராக்கியாவலசு
116. திரு. பெரியசாமி வெளவால் கொத்தனூர்
117. திரு. முத்துச்சாமிக்கவுண்டர் தாராபுரம்
118. திரு. செல்வம், சந்திரா ஸ்டோர்ஸ் தாராபுரம்
119. திரு. ஜி. பெரியசாமி காங்கயம்
120. திரு. கான்ட்ராக்டர் இராமசாமி தாராபுரம்
121. திரு. மு. பழனிச்சாமி அய்யம்பாளையம்
122. திரு. செகி. சுப்பிரமணியம் பெரிச்சிபாளையம்
123. திரு. தங்கவேல் நாதம்பாளையம்
124. திரு. கே. சாமிநாதன் நாதம்பாளையம்
125. திரு. ஆர். மகாலிங்கம் கோபாலபுரம்
126. திரு. கே.எஸ். மணி சீரனூர்
127. திரு. ப. வேலுச்சாமிக்கவுண்டர் பெரிச்சிபாளையம்
128. திரு. தங்கமுத்து தாராபுரம்
129. திரு. எம். தங்கராஜ் வெளவால்கொத்தனூர்
130. திரு. சிவராஜ் பிரதர்ஸ் தும்பலப்பட்டி
131. திரு. கே. நடராஜ் தொண்டாமுத்தூர்
132. திரு. சி. நாச்சிமுத்து தொண்டாமுத்தூர்
133. திரு. ஆர். கந்தசாமி அய்யம்பாளையம்
134. திரு. நல்ல சுப்பிரமணியம் அய்யம்பாளையம்
135. திரு. பி. நடராஜ கவுண்டர் கருமாபுரம்
136. திரு. பாலகோபால் கருமாபுரம்
137. திரு. எஸ். முத்துசாமி தொட்டம்பாளையம்
138. திரு. இரத்தினசாமி தொட்டம்பாளையம்
139. திரு. சி. கருப்பணகவுண்டர் வெடிக்காரன்வலசு
140. திரு. எம். வேலுசாமி வெடிக்காரன்வலசு
141. திரு. என். சிவசுப்பிரமணியம் பவானி - குமாரபாளையம்
142. திரு. கே. ஈஸ்வரன் பம்பாய்

மலர் வெளியீட்டுக் குழு

தலைவர் திரு. ஆர். பாலாமணி,
தாராபுரம்

செயலாளர் திரு. ஆனந்தா வி. பழனிசாமி,
தாராபுரம்

பொருளாளர் திரு. என். இராமசாமி,
சகுனிபாளையம்

செயற்குழு உறுப்பினர்கள்

திரு. நா. அருணாசலம், மந்திரிபாளையம்
திரு. கே. தெய்வசிகாமணி, பழனி
திரு. ஆசிரியர் வி. சுப்பிரமணியம், பெரிச்சிபாளையம்
திரு. ஆர். கனகராஜ், பொள்ளாச்சி

பதிப்பாசிரியர் - 'கொங்குச் செல்வர்'

புலவர் செ. இராசு, எம்.ஏ., பி.எச்.டி.,
தலைவர், கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

கோயில் பண்டாரங்கள்

1. திரு. எம்.எஸ். மணி, காங்கயம்
2. திரு. எம்.எஸ். திருமூர்த்தி, முதலிபாளையம்
3. திரு. எஸ். சக்திவேல், வட்டமலைபாளையம்
4. திரு. கே. குருநாதன், முதலிபாளையம்